உ


"ஈசன் நெறி பரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்
# KALASAM

ஜப்பசி-கார்த்திகை-மார்கழி 1995



லண்டனிலிருந்து வெளிவரும் முதல் ஆத்மீகக் காலாண்டிதழ் £1.00


காஞ்சிபுரம்
காமாட்சியம்மன் ஆலயம்
தென்னவன் சிவனின்
திருவருட்டிறன் சொல்லும்
தெய்வீக எழுத்துக்கள்
எத்தனையோ அத்தனைக்கும்
எங்களது ஆத்மீக வணக்கங்கள்

ஈசன் நெறி பரப்ப இன் தமிழ் வளர்ப்போம்

# கலசம்

மணி 3 ஒலி 12

ஐப்பசி - கார்த்திகை - மார்கழி 1995

*ஆசிரியர்*

திரு மு. நற்குணதயாளன்

*துணை ஆசிரியர்*

திரு க. ஜெகதீஸ்வரன்

*நிர்வாகப் பொறுப்பு*

திரு வ. இ. இராமநாதன்

*பொருளாதாரப் பொறுப்பு*

திரு சிவ. அசோகன்

*பொதுமக்கள் தொடர்பு*

திரு மாணிக்கம் சுரேஷ்

*விற்பனை விநியோகம்*

திரு இ. முருகதாசன்

*மகளிர் பகுதி*

திருமதி தமிழரசி சிவபாதசுந்தரம்

*விளம்பரப் பொறுப்பு*

திரு ந. சிவராசன்

வெளியீடு, அச்சமைப்பு

சைவ முன்னேற்றச் சங்கம் (பிரித்தானியா)

அச்சுப் பதிப்பு

செல்வம்

தொடர்பு முகவரி

**KALASAM**

**2, Salisbury road**

**Manor park**

**London E12 6AB**

**England**

**Tel : 0181 924 8115**

பன்னிரண்டாவது இதழ் உங்கள் கைகளில் தவழ்கிறது.
நாளுக்கு நாள் பெருகும் உங்கள் ஆதரவுக் கரங்கள் எமக்கு உற்சாகத்தைத் தந்து கொண்டிருக்கின்றன.
பல வாசகர்கள் சிறுவர்கள் பயன் படக் கூடியவகையில் கட்டுரைகள் பிரசுரித்தால் புலம்பெயர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கும் எங்கள் சமூகத்திற்குப் பயனுள்ளதாக அமையும் என்று கூறியதற்கமைய இம்முறை என்றுமில்லாதவாறு சிறுவர்களுக்கான பக்கங்களை அதிகரித்துள்ளோம்.
அத்தோடு கட்டுரைகளில் கடுந்தமிழ்ப் பிரயோகங்களையும் தவிர்த்துள்ளோம்.
கனடாவில் வாழ்ந்து கொண்டிருந்த ஆத்மீகச் சுடரொளியான ஆத்மஜோதி நா. முத்தையா அவர்கள் இறைபதம் அடைந்தமை ஆத்மீக உலகத்திற்குப் பேரிழப்பாகும்.
அவரது ஆத்ம ஈடேற்றத்திற்காக கலசம் அதன் வாசகர்களோடு சேர்ந்து பிரார்த்தனை செய்கிறது.
எமது பிறந்த மண்ணில் சமாதானப்புறா பறந்துவிட்டது.
துன்பமும் துயரமும் எம் உடன் பிறப்புகளை அரித்துத் தொலைத்துக் கொண்டிருக்கின்றன.
என்ன செய்வது ஏது செய்வது என்று புரியாமல் மக்கள் மடிந்து கொண்டிருக்கிறார்கள்.
அவர்களைக் காப்பாற்றும்படி இறைவனை வேண்டிக் கொள்வோம்.
ஓம் நமசிவாய!


மு. நற்குணதயாளன்

## தீபாவளி வாழ்த்துக்கள்

அன்பு வாசகர்களுக்குக் கலசம்
தீபாவளி வாழ்த்துக்களை
இதய பூர்வமாகத் தெரிவிக்கிறது

# எப்சம் நகரில் அன்னையின் அருளாட்சி

## க. ஜெகதீஸ்வரன்



மாதா, பிதா, குரு, தெய்வம் என்றும் அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்றும் அம்மையே அப்பா என்றும் பால் நினைந்து ஊட்டும் தாயினும் சால என்றும் தாயின் பாச உணர்வையும் தாயின் பெருமையையும் நம் முன்னோர்கள் கூறிப்போந்தார்கள். நம்மைப் படைத்தவள் நமது தாய். உலகைப் படைத்தவள் உலகத் தாய். வடமொழியில் ஜகன்மாதா என்பர். ஸ்ரீ லலிதா சகஸ்ர நாமத்தில் ஸ்ரீ மாதாயை நம என்று வருகிறது. சிவபெருமான் பஞ்சகிருத்தியங்களைச் செய்வதற்கு காரணமாக இருக்கும் அந்த அன்னைக்கு ஓர் ஆலயம் அமைக்கப்பட்டிருக்கிறது என்று கேள்வியுற்றதும் பார்க்கப் போயிருந்தோம்.

"எப்சம்"என்று சொன்னதும் பலருக்கு உப்பும் குதிரைச் சவாரியுந்தான் நினைவுக்கு வரும். அந்த எப்சம் உள்ளூராட்சி எல்லையுள் அமைந்த கிராமமான ஸ்டோன்லி எனும் இடத்திலேயே மாதா கோயில் கொண்டுள்ளாள். சென்ற ஆண்டு ஜனவரி மாதம் St John's Church மண்டபத்தை விலைக்கு வாங்கி திருத்தங்கள், திருப்பணிகள் செய்து இந்த ஆண்டு ஏப்பிரல் மாதம் ஐந்தாம் நாள் ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி அம்பாளை பிரதிட்டை செய்து வழிபடுகிறார்கள். இந்தக் கோயில் நிருவாகத்தை திருமதி ஈஸ்வரி கமலபாஸ்கரன், திரு குணசிங்கம், திரு விநாயகமூர்த்தி, டாக்டர் ஸ்ரீதரன், டாக்டர் ஸ்ரீரங்கலிங்கம் ஆகியோர் பொறுப்பெடுத்திருக்கிறார்கள். இலண்டனில் முருகன் கோயில் வேலைகள் முடிவடையுந் தறுவாயில் அம்பாளுக்கும் ஆலயம் அமைக்க வேண்டும் என்ற எண்ணம் திருமதி ஈஸ்வரி அவர்களுக்கு ஏற்பட்டது. தம்மோடு அப்போது திருப்பணியில் ஈடுபட்டிருந்த மற்றைய இருவரையும் அழைத்து இந்தத் திருப்பணியைத் தொடங்கினார்கள். கோயில் சுமார் நூறு பேர் வரை அமர்ந்து வழிபடக்கூடிய மண்டபமாக உள்ளது. உள்ளே அம்பாளோடு பால கணபதி, பால முருகன் ஆகிய திருவுருவச் சிலைகளையும் வைத்துள்ளார்கள். நவக்கிரகங்களும் இப்போது உள்ளன. முழுநிலவு வரும் தினங்களில் நிலாவொளி அம்பாள் மீது விழுவது பார்க்க அழகாக இருக்கும் என்றார்கள். இந்தக் கோயிலில் அர்ச்சகராக சிவஸ்ரீ சுவாமிநாதர் சிவாசாரியார் அவர்கள் பணிபுரிகிறார்கள். இவர்கள் திருவண்ணாமலையைச் சேர்ந்தவர்கள்.

கோயில் கட்ட நினைத்தபோது பராசக்தி உருவையே முதலில் அமைப்பதாக இருந்தார்கள். ஆனால் எங்கும் பராசக்தி திருவுரு கிடைக்காததால் ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி திருவுருவை கும்பகோணத்திலிருந்து செய்வித்துக் கொண்டுவந்திருக்கிறார்கள். நிதி திரட்டி மேலும் திருத்தங்கள் செய்யும் திட்டம் உண்டு.

மிக விரைவில் பக்கத்திலும் ஒரு மண்டபம் அமைக்கப்போகிறார்கள். இதிலே திருமணங்கள், முதியோர் சந்திப்பு. சமய சொற்பொழிவுகள் ஆதியன நடக்க ஏற்பாடுகள் நடந்துவருகின்றன. ஏற்கெனவே பக்தர்கள் பலர் இந்த அம்பாள் அருள்மிக்கவர் என்று நம்புகிறார்கள். தேம்ஸ் நதியின் தென்புறத்தில் அன்னை ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அமர்ந்து அருள்பாலித்துக்கொண்டு இருக்கிறாள். இந்தக் கோயிலுக்கு கலசம் ஆதரவு எப்பொழுதும் இருக்கும். அதுபோல கோயில் ஆதரவையும் கலசம் நாடி நிற்கிறது.



# மூன்று "த"

ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி சங்கராசாரிய ஸ்வாமிகள்

தேவர்கள், அசுரர்கள், மநுஷ்யர்கள் எல்லாருமே பிரம்மாவுக்கு ஒரே மாதிரிக் குழந்தைகள்தாம். பரமாத்மாவுக்குப் பல தினுசான லீலை வேண்டியிருக்கிறது. நல்லது, கெட்டதுகளை மோத விட்டு வேடிக்கை பார்க்க வேண்டியிருக்கிறது. அதற்காக அவர் பிரம்மாவைக் கொண்டு தேவ ஜாதி, அசுர ஜாதி, மநுஷ்ய ஜாதி முதலானவைகளைச் சிருஷ்டிக்கச் செய்கிறார். இந்த மூன்று ஜாதிக்கும் நல்லதைச் சொல்ல பிரம்மா கடமைப் பட்டிருகிறார்.

ஒரு சமயம் தேவர்கள் எல்லோரும் பிரம்மாவிடம் போய், " எங்களுக்குச் சுருக்கமாக ஒரு உபதேசம் பண்ணுங்கள்" என்று பிரார்த்தித்துக் கொண்டார்கள்.

பிரம்மா, "த" என்ற ஒரே அக்ஷரத்தை மட்டும் சொல்லிவிட்டு, "இதுதான் உபதேசம், இதற்கு அர்த்தம் புரிந்து கொண்டீர்களா?" என்றார்.

*நம்பிடத்திலே இருக்கிற தப்பு நமக்கே நன்றாகத் தெரியும். ஆனதால் யாராவது ரொம்ப சூக்ஷ்மமாக, சூசனையாக, எடுத்துக் காட்டினால் உடனே நாம் புரிந்துகொண்டு விடுவோம்.*

இந்த ரீதியில் தேவர்களுக்கு, பிரம்மா "த" என்று சொன்னவுடனேயே அதற்கு இன்னதுதான் அர்த்தமாக இருக்கும் என்பது புரிந்துவிட்டது. தேவர்களிடம் இருக்கிற பெரிய கோளாறு இந்திரிய நிக்ரஹம் (புலனடக்கம்) இல்லாததுதான். தேவலோகம் ஆனந்த லோகமல்லவா? அங்கே ஸுக வாஸிகளாக மனம் போனபடி இருப்பது தேவர்களின் வழக்கம். ஆனபடியால், "இந்திரியங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள்" என்றுதான் பிரம்மா குறிப்பால் உணர்த்துகிறார், hint பண்ணுகிறார் என்று புரிந்து கொண்டார்கள்.

"புரிந்து விட்டது, 'தாம்யத' என்று தாங்கள் உபதேசித்து விட்டீர்கள்" என்று பிரம்மாவிடம் சொன்னார்கள்.

தமம், சமம் என்று இரண்டு உண்டு. தமம் என்பது புலனடக்கம். அதற்கும் மேற்பட்டது சமம். சமம் என்பது மனோ நிக்ரஹம் – மனஸையே அடக்கிவிடுவது. சமம், தமம் முதலான ஆறு குணங்களை 'சமாதி ஷட்கஸம்பத்' என்று பெயரிட்டு, ஸாதகர்களுக்கெல்லாம் நம் பகவத்பாதாள் விதித்திருக்கிறார். சமத்தோடு கூட, அதாவது மனம் அடங்கி இருக்கிற நிலைதான் சாந்தி. மனம் அடங்காவிட்டாலுங்கூட இந்திரியங்களையாவது 'தமம்' என்று கட்டுப்படுத்துவது தாந்தி.

*"தாம்யத" என்றால் "தமத்தைச்" செய்யுங்கள்: அதாவது இந்திரியங்களைக் கட்டுப்பாடு (control) பண்ணிக் கொள்ளுங்கள்" என்று அர்த்தம்.*

பிரம்மா 'த' என்று சொன்னது 'தாம்யத' வுக்குச் சுருக்கம் (abbreviation) என்று தேவர்கள் அர்த்தம் பண்ணிக் கொண்டார்கள்.

ஒரு முழு வார்த்தையைச் சொல்வதைவிட அதில் முதல் எழுத்தை மட்டும் சொன்னால் அதற்கு

ஜாஸ்தி சக்தி இருக்கிறது. சர்ச்சில் கூட "வி ஃபார் விக்டரி" என்று சொல்லி, எங்கே பார்த்தாலும் இந்த "வி" யை மந்திரம் மாதிரிப் பரப்பினார்.

"நீங்கள் அர்த்தம் பண்ணிக் கொண்டது சரிதான்" என்று பிரம்மா தேவர்களை அனுப்பினார்.

மநுஷ்யர்களுக்கும் இதேமாதிரி உபதேசம் வாங்கிக்கொள்ள ஆசை வந்தது. அவர்களும் பூர்வ காலத்தில் பிரம்மாவை நெருங்கக் கூடிய வர்களாக இருந்தார்கள். அதனால் அவரிடம் போய், "உபதேசம் பண்ணுங்கள்" என்று வேண்டிக் கொண்டார்கள்.

மறுபடியும் பிரம்மா 'த' என்ற ஒரு சப்தத்தை மட்டும் சொன்னார்.

மநுஷ்யர்களுக்கும் தங்கள் குற்றம் உள்ளுக்குள் உறுத்திக் கொண்டிருந்ததால், தங்களுக்கு அத்தியாவசியமான உபதேசம் இன்னது என்று பளிச்செனப் புரிந்து கொண்டார்கள்.

"அர்த்தம் தெரிந்ததா?" என்று பிரம்மா கேட்டவுடன் "தெரிந்துகொண் டோம் - 'தத்த' என்று உபதேசம் பண்ணியிருக்கிறீர்கள்" என்றனர்.

*'தத்த' என்றால் 'கொடு', 'தானம் பண்ணு' என்று அர்த்தம். 'தத்தம் பண்ணுவது', 'தத்து கொடுப்பது' முதலான வார்த்தைகள் வழக்கத்தில் கூட இருக்கின்றனவே?*

"ஆமாம், நீங்கள் சரியாகப் புரிந்து கொண்டிருக்கிறீர்கள்" என்று பிரம்மா மநுஷ்ய ஜாதியிடம் சொல்லி அனுப்பிவைத்தார்.

தேவர்களும், மனிதர்களும் உபதேசம் வாங்கிக்கொண்டால் அசுரர்கள் மட்டும் சும்மா இருப்பார்களா? அவர்களும் பிரம்மாவிடம் வந்து உபதேசம் கேட்டார்கள். அவரும் பழையபடி அந்த "க்ரிப்டிக்" (சுருக்கமான) "த" உபதேசத்தையே பண்ணினார். "புரிந்ததா?" என்று கேட்டார். அசுரர்கள் உடனே, "புரிந்து விட்டது - 'தயத்வம்' என்று உபதேசம் பண்ணிவிட்டீர்கள்" என்றனர். பிரம்மாவும் 'ஆமாம்' என்றார்.

*'தயத்வம்' என்றால் 'தயையோடு இருங்கள்' என்று அர்த்தம்.*

இரக்கம் இல்லாதவர்களைத்தானே அரக்கர் என்று சொல்லி இருக்கிறது? கொஞ்சம் கூட தயா தாக்ஷிண்யம் இல்லாத குரூர ஸ்வபாவம் தான் அசுரர்களின் இயற்கை. அதனால் 'த' வுக்கு இப்படி அர்த்தம் பண்ணிக் கொண்டார்கள்.

இடி இடிக்கிறபோது 'த த த' என்கிற மாதிரி சப்தம் கேட்கும். "தாம்யத - தத்த - தயத்வம்" என்பதுதான் அந்த மூன்று த. இது பிருஹதாரண்ய உபநிஷத்தில் வருகிற கதை.

*நம் சங்கர பகவத் பாதாள் இதற்கு பாஷ்யம் எழுதுகிறபோது, "இங்கே தேவர், அசுரர் என்று சொன்னதெல்லாமும் மநுஷ்யர்களுக்கு வேறல்லர். மனிதர்களிலேயே எல்லா நல்ல குணமும் இருந்தும் புலன டக்கம் இல்லாதவர்கள் தேவர்கள், கொடுக்கிற சுபாவமேயில்லாமல் லோப குணத்தோடு இருப்பவர்கள் அசல் மநுஷ்யர்கள், ஹிம்சை பண் ணிக்கொண்டு குரூரமாக இருக்கிற மனிதர்களே அசுரர்கள். ஆனதால் மூன்று உபதேசங்களும் நமக்கே ஏற்பட்டவை என்றுதான் நாம் அர்த்தம் பண்ணிக்கொள்ள வேண்டும்" என்று சொல்லியிருக்கிறார்.*

வாஸ்தவந்தான். ஆனாலும் இங்கே சொல்லியிருப்பதில் இருந்து மனித வர்க்கத்துக்கென்று இருக்கிற பெரிய குறைபாடு லோபித்தனம் தான் என்று தெரிகிறது. இந்திரிய நிக்ரஹம் பண்ணினவர்கள் ஆகவும், குரூரஸ்வபாவம் துளிக்கூட இல்லாமலும்கூட மனிதர்கள் தங்களை உயர்த்திக்கொண்டுவிடலாம். ஆனால் இப்படிப்பட்டவர்கள் கூடப் பொருளை எடுத்துக் கொடுப்பது, தானம்செய்வது என்றால் கொஞ்சம் பின்னேதான் நிற்கிறார்கள். பொருளில் பற்றை விடுவதுதான் மநுஷ்யனுக்கு மகா கஷ்டமாக இருக்கிறது. இதனால்தான் மனிதனுக்கு முக்கியமாக 'தத்த - தானம் பண்ணு' என்று வேதத்தின் முடியில் இருக்கப்பட்ட உபநிஷத்தே உபதேசம் பண்ணுகிறது.

**நன்றி : கல்கி**

---

ஒரு சாதுவானவர் ஜனநெருக்கமுள்ள ஒரு தெருவழியே போய்க் கொண்டிருந்தார். அப்பொழுது தற்செயலாக ஒரு துஷ்டனு டைய காலை அவர் மிதித்துவிட்டார். அப் பொல்லாதவனுக்கு தாங்க முடியாத கோபம் வந்துவிட்டது. அப் பெரியவர்மீது சிறிதும் இரக்கம் காட்டாமல் அவரைத் தாக்கி மிகவுட அடித்தான். சாது பிரக்ஞையற்று தரையில் விழுந்தார். அதைக் கேள்விப்பட்ட சிஷ்யர்கள் ஓடிவந்து பாடுபட்டு அவருக்குப் பணிவிடை செய்து பிரக்ஞை வரும்படி செய்தார்கள். அவர் கண்திறந்து பார்த்தார். சிஷ்யர்களில் ஒருவர் அப் பெரியவரைப் பார்த்து "சுவாமி இப்பொழுது தங்களுக்கு குற்றேவல் புரிவது யாரென்று தெரிகிறதா?" என்று கேட்டார். "இந்தச் சரீரத்தை அடித்த கை இப்பொழுது இதற்குப் பணிவிடை பண்ணுகிறது." என்று சாது பதில் சொன்னார். உண்மையான ஞானிக்கு மித்திரன் என்றும் சத்துரு என்றும் அடிப்பவனென்றும் அடிபடுபவனென்றும் வித்தியாசமே கிடையாது.

**-ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸர்-**

# சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்

மு. நற்குணதயாளன்



## நான்கு

இக் கட்டுரைத் தொடரின் நான்காவது பிரிவு இது. மாணிக்கவாசகரை ஒரு உயர்ந்த கவியாகவும் அவர்தம் சமூகப்பார்வையின் உயர்நோக்கினையும் அவ்வப்போ தெளிவு படுத்துவதோடு சிவபுராணத்தை இலகு தமிழில் புரிய வைக்கவும் முயற்சி செய்து இக்கட்டுரையை அமைத்து வருகிறேன். சென்ற தடவை சிவபுராணத்தின் "மலம் சோரும் ஒன்பது வாயிற் குடிலை......" என்பதோடு விட்டிருந்தோம். இம்முறை மிகுதி வரிகளைப் பார்ப்போம்.

**மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய**
**விலங்கு மனத்தால் விமலா உனக்கு**
**கலந்த அன்பாகிக் கசிந்து உள் உருகும்**
**நலம்தான் இல்லாத சிறியேற்கு நல்கி**
**நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி**
**நாயிற் கடையாய் கிடந்த அடியேற்கு**
**தாயில்சிறந்த தயாவான தத்துவனே**

முதல்இரண்டு வரிகளிலும் மனிதப்பிறவியின் கீழ்நிலையை தன்னுடைய கீழ் நிலையாகக் கூறுவதை அவதானிக்க வேண்டும். அறிவு கலங்கும்படியாக புலன்கள் ஐந்தும் வஞ்சிக்கப்பட்டு மனம் விலங்காக மாறிவிட்டதால் அன்புள்ளவனே உன்னிடம் கலந்து அன்பினால் கசிந்து உன்னை நினைந்து உருகும் பண்புகூட இல்லாத சிறியவனாகிய எனக்கும் அருள் புரிந்தாய். அத்தோடு இல்லாமல் பூமிக்கு வந்து உன் திருவடிகளையும் காட்டினாய். நாயிலும் கீழான நிலையில் உள்ளஉன் அடியவர்க்குத் தாயை விடச் சிறந்த அன்பைச் செலுத்தினாய். இங்கு இறைவன் எல்லோர்க்கும் பொதுவானவன் என்கின்ற தத்துவம் புலப்படுகின்றது.

உலக ஆசைகளால் உந்தப்பட்டு தவறு செய்கின்ற உயிர்களையும் இறைவன் பாதுகாப்பான் என்று கூறுகின்றார். உலகில் மிகச்சிறந்த அன்பு தாய் அன்பு. அந்த அன்பையும்விடச் சிறந்த அன்பினை இறைவன் செலுத்துவான் என்று அவர் கூறுவதைப்பார்க்கும் போது உள்ளம் சிலிர்க்கின்றது.

**மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே,**
**தேசனே தேனார் அமுதே சிவபுரனே**
**பாசமாம் பற்று அறுத்துப் பாரிக்கும் ஆரியனே.**
**நேச அருள் பரிந்து நெஞ்சில் வஞ்சம்கெட**
**பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே**
**ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே**
**ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே**
**நீராய் உருக்கி என்ஆருயிராய் நின்றானே**

மாசு அற்ற என்றால் குறைபாடு அற்றவன் எனலாம். ஆகவே குறைபாடு இல்லாத சோதியாக மலர்ந்த ஒளிச்சுடரே என்று இறைவனைக் கூறினார். அடுத்த வரியில் தேசனே என்று மாணிக்கவாசகர் கூறுகிறார். இச்சொல்லுக்கு பல முரண்பாடான கருத்துக்கள் விளக்கவுரையாளர்களால் கொடுக்கப்பட்டுள்ளன. தேசனே என்று சொன்னால் அகராதிப்படி ஒளிமயமானவன் என்று பொருளாகும். ஆனால் எந்தச்சொல்லினது பொருளும் அச்சொல் பாவிக்கப்பட்டுள்ள கவிதையின் ஓட்டத்தோடு வைத்தே தீர்மானிக்கப்படவேண்டும் என்பது கருத்தாகும். இவ்வகையில் பார்க்கும் போது முதலாவது வரியில் ஒளிச்சுடர் என்று இறைவனைக் கூறிய மாணிக்கவாசகர் இரண்டாவது வரியிலும் ஒளிமயமானவன் எனதிரும்பவும் கூறியிருப்பார் என்று கொள்ளமுடியாது. ஆயின் தேசனே என்பதற்கு பல தேசங்களில் இருப்பவன் இருப்பவன் என்கின்ற கருத்தும் மலினமாகவேபடுகின்றது. ஆயின் என்னைப் பொறுத்தவரை தேசனே என்று சொல்லும்போது இறைவன் ஆனவன் அங்கு இங்கு என்றில்லாமல் எங்கும் நிறைந்தவன் என்ற கருத்தைக் புலப்படுத்துகின்றது என்பதே பொருத்தமாகும் தொடர்ந்து உண்ண உண்ண இனிக்கும் அமிர்தமாக உள்ளவனே என்று கூறுகிறார். உலக ஆசைளை அறுத்து அறிவாக விளங்குபவன் என்றும் மனதில் களங்கம் அற்றுப் போய் நெஞ்சில் நிறைவு கொண்டு பெருங்கருணை வெள்ளமாகத் தோன்றும் பெரிய நதியாக உள்ளவன் என்றும் கொள்ளுகின்றார்.

ஓராதார் என்றால் ஆராய்ந்து உணராதவர் எனலாம். ஆக ஆராய்ந்து உணராதவர் உள்ளத்தில் அவர்களுக்குப் புலனாகாமல் மறைந்திருக்கின்ற சோதி வடிவானவன் என்றும் என் உயிருக்குள் உயிராக நிற்பவன் என்றும் அழகாகக் கூறுகின்றார்.

**இன்பமும் துன்பமும் இல்லானே! உள்ளானே!**
**அன்பருக்கு அன்பனே! யாவையுமாய் இல்லை யுமாய்**
**சோதியனே! துன்னிருளே! தோன்றாப் பெருமையனே!**
**ஆதியனே! அந்தம் நடுவாகி அல்லானே!**
**ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெரு மானே!**

இன்பமும் துன்பமும் இல்லாதவன் என்று கூறும் மாணிக்கவாசகர் உடனேயே உள்ளானே என்று கூறுகிறார். அதாவது இறைவனானவன் தன் அடியார்களின் துன்பத்தை தன் துன்பமாகக் கருதி ஏற்றுக் கொள்பவனானதால் உள்ளானே என்கிறார். அவனை நாடி வழிபடும் அன்பருக்கெல்லாம் அவன் அன்பன். உலகப் பொருள்கள் யாவுமே அவனாகி அதேவேளை அவை யாவும் இல்லாதவனாகவும் ஆகி உள்ள சோதி வடிவானவனே. இருள் வடிவானவனே! தோன்றாப் புகழுடையவனே! ஆதியும் அந்தமும் இல்லாதவனே! என்னை நீயே அழைத்து ஆட்கொண்ட அன்பு வடிவான என் தந்தையே! என்கின்றார் மாணிக்கவாசகர்.

(இன்னும் வரும்......)

# தர்மம் செய்வோம்

அமரர் ஆத்மஜோதி நா. முத்தையா

தருமம் என்பது எல்லோரும் செய்து விட முடியாது. முயன்றால் செய்ய முடியும். துரியோதனனுடைய பொருளை கர்ணன் வறியவருக்குக் கொடுத்து கொடைக்குக் கர்ணன் என்ற பெயரையும் புகழையும் பெற்றான். துரியோதனன் ஒருநாள் சிந்தித்தான். பொருள் என்னுடையது. புகழ் எதற்காகக் கர்ணனுக்குப் போகவேண்டும். அதனை நானே கொடுத்து அப்புகழை நானே சம்பாதித்தால் என்ன? என்பதுதான் துரியோதனுடைய உள்ளத்தில் எழுந்த எண்ணமாகும்.

அன்று தொடக்கம் அவனே கொடுத்து வந்தான். கர்ண மகாராசாவும் சந்தோசமாக விட்டுக் கொடுத்தான். ஒருநாள் நல்ல மழை. ஒருவர் வீட்டிலும் காய்ந்த விறகே இல்லை. முனிவர்கள் அக்கினிக் காரியம் செய்வதற்கு விறகே இல்லை. துரியோதனனுடைய இல்லத்தில் முனிவர் கூட்டம் வரிசையாக நின்றது. துரியோதனனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. துரியோதனனுடைய வீட்டில் தேநீர்கூட வைப்பதற்கு விறகில்லை. இத்தருணத்தில் கர்ணன் எப்படி சமாளிப்பான் என்பதைத் தெரிந்து கொள்ள துரியோதனன் விரும் பினான். உடனே இந்த நிமிடம் தொடக்கம் கர்ணமகாராசனே கொடுப்பான் என்பதை முனிவர்களுக்கு அறிவித்தான். முனிவர் கூட்டம் கர்ணமகாராசாவின் வீட்டை முற்றுகையிட்டது. கர்ணமகாராசன் முனிவர்களின் தேவையைக் கேட்டறிந்தான். உடனே கதவுகளையும் கதவு நிலைகளையும் பிளந்தான். வீட்டுக் கைமரங்களை வீழ்த்தினான். முனிவர்களுடைய அபிலாசைகளைப் பூர்த்தி செய்தான். இவைகள் எல்லாம் துரியோதனனுடைய இல்லத்திலும் இருந்தனதானே. ஆனால் பொருள் இருந்தாலும் கொடுத்துப் பழக வேண்டும். இதனால்தான் கொடையும் கொடைப் பழக்கம் என்றனர் பெரியோர். சீதக்காதி என்றொரு கொடையாளி இருந்தார்.

அவர் இறந்து அவரைப் புதைத்தபின் ஒரு இரவலன் வந்தான். அவர் இறந்து விட்டதைக் கேள்விப்பட்டான். அவரைப் புதைத்த புதைகுழிக்குச் சென்றான். அன்று வந்திலனே என்று புலம்பினான். எனது வினை அப்படி என்று தன்னையே நொந்து கொண்டான்.

என்ன ஆச்சரியம் பிரேதக் குழியிலிருந்து கையொன்று மேலேவந்தது. அதில் விலையுயர்ந்த மோதிரம் ஒன்று காணப்பட்டது. அதனை அந்த இரவலன் பெற்று தனது வறுமையைப் போக்கிக் கொண்டான். அதனால் தான் " செத்துங் கொடுத்தான் சீதக்காதி " என்ற முதுமொழி இன்றும் வழங்கி வருகின்றது.

" தனக்குக் கண்டு தானம் " என்பார்களே அது பிழை. அது சுயநலம். தனக்கில்லையெனினும் தானம் வழங்குக என்பதுதான் சரி. அதுதான் பரநலம். தருமத்தினால் சுயநலம் அழிந்து பொதுநலம் வளருகின்றது. தன்னைப்போல பிறரை நேசிக்கும் பண்பு வளரும்.

சுவாமி சிவானந்தர் " கொடு! கொடு கொடுத்துக் கொண்டேயிரு " என்பார்கள். நான்கு சட்டைகள் இருந்தால் அவற்றில் இரண்டைத் தானம் செய்து விடு என்பார். தவிர்க்கமுடியாத தருணம் வந்தால் இரண்டில் ஒன்றையும் தானம் செய்துவிடு என்பார். தவிர்க்க முடியாத தருணம் வாய்த்தால் அந்த ஒன்றையுமே கொடுத்துவிடு என்பார்.

தமிழரின் இப் பண்பாடு எல்லோரிடமும் வளருமேயானால் தமிழினம் தானத்தினால் வளர்ந்தோங்கிச் செழிக்கட்டும். தமிழருடைய பண்பாடு தருமம்தான் என்பதை உலகம் அறிந்து அப் பண்பாட்டைக் கடைப்பிடிக்கட்டும்.

அண்மையில் இறைபதம் அடைந்த அமரர் ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களின் ஞாபகார்த்தமாக இக்கட்டுரையை வெளியிடுகிறோம்.



தத்துவம் சொல்லும் சின்னக் கதைகள்

# மாட்டுத் தலை பன்றித் தலையாகிய மாபெரும் அதிசயம்

வீ. ஆறுமுகதாஸ்

யாழ் நகரின் கிழக்கே ஆறுமைல் தொலைவில் உள்ளது மட்டுவில் எனும் கிராமம். இற்றைக்கு ஏறத்தாழ நூற்றைம்பது வருடங்களுக்கு முன்னர் அக்கிராமத்தில் அடிக்கடி மாடுகள் களவு போயின. மாடுகளைப் பறிகொடுத்தவர்கள், திருடியவர்களைக் கண்டுபிடிக்க முடியாது திண்டாடினர். எனினும் ஆவுரித்துத் தின்னும் யாரோதான் இதனைக் கச்சிதமாகச் செய்து முடிக்கிறார்கள் என்றுமட்டும் உணர்ந்தனர். ஆனால் அவர்கள் ஊகத்தை நிரூபிக்க யாராலும் முடியவில்லை.

நாள்கள் வளர்ந்து மாதங்களாயின. ஒரு நாள் முரசடிக்கும் இனத்தைச் சேர்ந்த ஒருவன், தானும் மாடு ஒன்றைத் திருடி தன் உறவினர்களுடன் பங்கிட்டு உண்டாலென்ன? என்று நினைத்துச் செயலிலும் இறங்கினான். திருடுவதைத் திறம்படச் செய்த அவனால் அந்தப் பசுவின் கதறலை அடக்க முடியவில்லை. அவ்வழியே வந்த விவசாயி ஒருவனுக்கு அந்தப் பசுவின் கதறல் கேட்க அவன் ஊரையே கூட்டிவிட்டான். கிராமத் தலைவரையும் அழைத்து வந்தான்.

கிராமத் தலைவரோடு அத்தனை நாள் பசுக்களைப் பறிகொடுத்தவர்களும் கூடிவிட்டார்கள். அனைவரும் கோபத்தோடு திருடனை வெளியே வரும்படியும். வெட்டு! கொல்! என்றும் கூக்குரலிடத் தொடங்கினார்கள்.

கிராமத் தலைவர் மாடு எங்கிருக்கிறது என்று தன்னுடன் வந்தவர் உதவியோடு தேட ஆரம்பித்தார். ஊர் முழுவதும் கூடிவிட்டதைக் கண்ட திருடன் மிகவும் பயந்து தனது வீட்டுக்குள் நுழைந்துவிட்டான். அங்கு கை கூப்பிய வண்ணம் அந்த ஊரிலுள்ள கண்ணகை அம்மன் கோயிலை நோக்கி, " அம்மா! தாயே! நான் ஒரு பொழுதும் பாவஞ் செய்யாதவன். தெரியாமல் ஒரேயொரு முறை இந்தப் பாவத்தைச் செய்துவிட்டேன். இந்த முறை மன்னித்தாயானால் என் உயிர் உள்ளவரை உனது கோயிலுக்கு வந்து தினமும் முரசறைவேன்" என்று தொழுதான்.

வெளியிலே மாடு புதைத்த இடம் என்று தெரிந்து ஊர் மக்கள் ஓர் குழியைத் தோண்டினார்கள். திருடன் தனக்கு இனி அழிவுதான் என்று மயங்கி விழுந்து விட்டான். அபிராமிப் பட்டரைக் காத்த அபிராமி அன்னைபோல் கண்ணகை அம்பாளும் திருடனைக் காக்கத் திருவுளம் கொண்டாள். என்ன அதிசயம்? அங்கே மாட்டுக்குப் பதில் ஒரு பன்றி இருந்தது. " நாம் காண்பது கனவா, நனவா" என்று மக்கள் அதிசயித்தனர். ஆர்ப்பரித்த மக்கள் அமைதியாயினர். கூப்பிய கரத்தோடு வெளியே வந்த முரசறைவோன் உண்மையை மக்கள்முன் ஒப்புக்கொண்டான்.

இவ்வற்புதம் ஓர் பங்குனிமாதத் திங்கட்கிழமை நடைபெற்றதாகவும் அதிலிருந்து பங்குனித் திங்கள் அந்த அம்பாளின் விசேடத் திருநாளாகியது என்றும் சிலர் கூறுகின்றனர். அந்தத் தலத்தின் பெயர் அன்று முதல் பன்றித்தலைச்சி அம்மன் கோயில் என்று வழங்குகிறது.

இத்தலத்தின் தீர்த்தம் மிகவும் விசேடமானது. அந்த நீரில் சமைத்த உணவு எதுவானாலும் நல்ல சுவையாக இருக்கும். இன்றும் மக்கள் இந்தக் கோயிலுக்குச் சென்று மோதகம், பொங்கல் போன்ற பலவகையான பிரசாதம் செய்து பகிர்ந்து உண்ணும் வழக்கம் உள்ளது. முரசறைவோரும் திங்கள் தவறாமல் வந்து முரசறை வார்கள். பல மக்கள் நேர்த்தி செய்து பலன் அடைவதை இன்றும் காணலாம்.


கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.

கலசம் வாசகர்களிடமிருந்து இப் பகுதிக்கு கதைகளை எதிர் பார்க்கிறோம். கதைகள் முழுத்தாளில் இரண்டுபக்கங்களுக்கு மேற்படாமல் இருக்கவேண்டும்.
தரமான கதைகள் பிரசுரிக்கப்படும்.
அனுப்பவேண்டிய விலாசம்

EDITOR
'KALASAM'
42 STONELEIGH ROAD
CLAYHALL
ILFORD
ESSEX
IG5 0JD

# அகிம்சை தழைக்க அயராது உழைப்போம்

விழிதீட்டி, வித்தகபுரம் க. உமாமகேசுவரன்



கஞ்சி குடித்திளைத்துங் கந்தை உடுத்தலுத்தும்
அஞ்சி அடிபணிந்தும் அல்லலுற்ற - இந்தியராம்
மாந்தர் சுதந்தரமாம் மாட்சியெய்தி வாழவைத்த
காந்தி *கருணைக் கடல்.*

சப்பாத்தாற் பல்லைத் தகர்த்த தருணத்துந்
துப்பாக்கியாற் கோட்சே சுட்டயர்ந்த - அப்போதுஞ்
சாந்த சொரூபனாய்த் தாக்கினர்க்குந் தண்ணளிசெய்
காந்தி *கருணைக் கடல்.*


அன்றமரர்க் காக அரன்ஆல காலத்தைத்
தின்று துயர்தீர்த்த செம்மைபோல் - என்றுமே
சாந்தி தழைத்திடவே சாவினையுந் தானேற்ற
காந்தி *கருணைக் கடல்.*

கருணைக் கடலான காந்தி பெருமான்
உருவை உலகீர்! உளத்தில் - நிறுவி
அகிம்சை முதலாம் அவர்பண் புலகில்
முகிழ்க்க முயல்வோம் முனைந்து.

**இந்துமதத்தின் அடிப்படைக் கோட்பாடுகளான அகிம்சையையும், பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் என்ற கருத்தையும் உலகுக்கு உணர்த்துவித்த உத்தமர் காந்தியின் பிறந்ததினத்தை முன்னிட்டு இக்கவிதை பிரசுரமாகிறது**

**ஆசிரியர்**

# எமது தொடர்கட்டுரை




**திருத்தம்**

ஆடி-ஆவணி-புரட்டாதி 1995
இதழ் 10ம் பக்கம், கன்மம்
என்ற தலைப்பில்
1. தமிழிலக்கியங்கள் கன்மத்தை ஊழ் என்ற சொல்லால் குறிப்பிடுகின்றன.
12ம் பக்கம் கடைசிவரி
2. நம்பிக்கைக்கும் நல்வாழ்வுக்கும் ஏற்றதாக உள்ளது.
(தவறுகளுக்கு வருந்துகிறோம்)

## கோவில் கட்டுதல்

மத்திய காலத்தில் கோவில் கட்டும் பணி சிறப்பாக நடைபெற்றது. ஆரம்ப காலத்தில் மரத்தாலும் மண்ணாலும் செங்கற்களாலும் கட்டப்பட்டன . அவை காலப் போக்கில் அழிந்து விட்டன. பின்னர் கல்லினால் கோவில் கட்டும் வழக்கம் ஏற்பட்டது. பலவித மான கற்கள் உபயோகிக்கப்பட்டன. கற்களில் மிகவும் உறுதியானது கருங்கல். கருங்கல்லைப் உபயோகித்து பல கோவில்கள் கட்டப் பட்டுள்ளன. பாறைகளே இல்லாத ஊர்களிலும் பிரமாண்டமான அமைப்புடன் நிர்மாணிக்கப்பட்ட கற்கோவில்களைக் காணலாம். மன்னர்கள் தான் கோவில்கட்டும் பணியில் முன் நின்றவர்கள். இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் மன்னர்கள்தான் கட்டினார்கள். பின்னர் வணிகர்களும் தனவந்தர்களும் அப்பணியில் ஈடுபட்டனர். தென் இந்தியாவில் பாண்டியராச்சியம் கி.மு 300–கி.பி. 1700 வரை நடைபெற்றது என்று கூறுவர். அவர்களுடைய தலைநகரமான மதுரையில் அற்புத மான மீனாட்சி அம்மன் ஆலயம் கட்டப்பட்டது. பாண்டியர்களே சிறீரங்கம், ராமேஸ்வரம் என்ற ஆலயங்களையம் கட்டினார்கள். இக்கோவில்கள் பல பாகங்களாகப் பல மன்னர்களால் கட்டப்பட்டன.

இராமேஸ்வரத்திலுள்ள ஆமிரக்கால் மண்டபம் கி.பி. 1700இல் கட்டப் பட்டது .

பல்லவராச்சியம் கி.பி .250–750 வரை நீடித்தது. அவர்களுடைய தலைநகரம் காஞ்சிபுரமாக இருந்தது. சக்கரவர்த்தி மகேந்திரவர்மன் கற்கோவில்கள் அமைத்தான். அவன் மகன் நரசிம்மவர்மன் மகாபலிபுரத்திலுள்ள அற்புதமான பாறைச் சிற்பங்களையும் குகைக் கோவில்களையும் அமைக்க உதவினான். மகாபலிபுரம் ஒரு

கடற்துறைமுகமாக வெளிநாட்டு வர்த்தகத்துக்கு உபயோகிக்கப்பட்டு வந்தது. பல்லவர் கட்டிய கோவில்களில் சில கடலால் மூடப்பட்டு விட்டன. காஞ்சிபுரத்திலுள்ள கோவில்களும் பல்லவர்கள் கட்டியவை.

சோழ சாம்ராச்சியம் கி.மு 145–கிபி 1300 வரை நீடித்தது என்று கூறுவர். அவர்கள் ஆட்சியில் நிர்வாகம் கலை வளர்ச்சி, நீர்ப்பாசன முறைகள் மிகவும் சிறப்படைந்திருந்தன.செம்பியன் மகாதேவி என்ற சோழ அரசி சைவசமயத்தின் பெரிய காவலராக விளங்கினார். 10 கோவில்கள் கட்டினார். அவரின் பேரன் முறையினரான சக்கரவர்த்தி முதலாம் இராசராசன் கோவில் கட்டும் பணியில் பெரிய சாதனைகளை நிகழ்த்தினார். கோவில் சிற்ப சாத்திரத்தில் ஒரு புது யுகம் ஆரம்பமாகியது. அவர் கட்டுவித்த கோவில்களில் முக்கியமானவை தஞ்சை, தாராசுரம், திருபுவனம், சிதம்பரம் என்னும் ஊர்களில் அமைந்தவை தஞ்சைப் பெருங்கோவில் உலகப் பாரம்பரியச் சொத்தாகப் பேணப்பட்டு வருகின்றது. வீரசோழன் காலத்தில் சிதம்பரத்திலுள்ள சிவன் கோவில் விஸ்தரிக்கப்பட்டு பொன்கூரை வேலையும் செய்யப்பட்டது. சிதம்பரத்தைப் பொறுத்தவரை கட்டங் கட்டமாக விஸ்தீரண வேலைகள் நடைபெற்று 1685 இல் முடிவுற்றது என்பர். இராசராசனின் மகன், பேரன் என்ற வரிசையில் அவர் குடும்பத்தாரால் 52 கோவில்கள் கட்டப்பட்டன. உலோகத்தை உருக்கி சிலைகளைச் செய்யும் கலையும் சோழர் காலத்தில் விருத்தியடைந்தது. இலங்கையில் சோழர் ஆட்சி நடைபெற்றபோது பொலனறுவையில் 8 கோவில்கள் கட்டப்பட்டன.அவற்றுள் கூடுதலானவை சிவன் கோவில்கள். சேரர் காலச் சிற்பத்தில் வானளாவிய கோவில் கோபுரங்கள் எழுந்தன. இவற்றில் பல கலைப்படைப்புக்கள் இருக்கின்றன. கோவில்கட்டியதோடு அவற்றை வருடம் முழுவதும் பராமரிக்க வேண்டிய செலவுக்கும் வழி செய்தார்கள். கல் வெட்டுக்களில் அவற்றை எழுதி வைத்தனர்.

இந்தோனேசியாவில் மற்றராம் ராச்சியத்தின்போது (கி.பி 900) 150 சைவக்கோவில்கள் கட்டப்பட்டன.

இரண்டாவது சூரியவர்மனால் (கி.பி 1024) கம்போடியாவில் ஒரு பெரிய விஷ்ணுகோவில் கட்டப்பட்டது. இது ஆசியாவில் மிகப் பெரிய கோவில். இதன் சுற்றளவு 12 மைல். கோபுரம் 200 அடி. வட இந்தியாவிலும் பல கோவில்கள் மன்னர்களால் கட்டப்பட்டன. அந்நியரின் படையெடுப்பினால் பல கோவில்கள் அழிக்கப்பட்டன. துருக்கியர் படையெடுப்பின்போது (1024) சோமநாதசிவன் கோவில் அழிக்கப்பட்டது. அவுரங்கசீப் (1688) மதுராவிலுள்ள 1000 கோவில்களை அழித்தான் என்று சொல்லப்படுகிறது. முஸ்லிம் ஆட்சியாளரால் மொத்தமாக 60,000 இந்துக் கோவில்கள் அழிக்கப்பட்டு அந்த நிலங்களில் 3000 மசூதிகள் கட்டப்பட்டன என்று கூறப்படுகிறது. இலங்கையிலும் போத்துக்கேய, ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் பல இந்துக் கோவில்கள் அழிக்கப்பட்டன. இந்து கலாசார அமைச்சின் அறிக்கைப்படி இலங்கையில் இரண்டாவது ஈழப்போர்க் காலம் வரை 1600 இந்துக்கோவில்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளன.இது எமது காலத்தில் நடைபெற்றுள்ளது.

(தொடரும்.......)



# மாரடைப்பு நோயும் திருமூலர் திருமந்திரமும்

**செ. சிறீக்கந்தராசா**

நில்லாதவற்றை நிலையின என்று உணரும் புல்லறிவாண்மை கடை; ஆதலினால் அல்கா இயற்பிற்றுச் செல்வம் அது பெற்றால் அல்குப ஆங்கே செயல் என்று வள்ளுவன் நிலையாமை பற்றிச் சொன்னான். வள்ளுவன் காலத்தின்முன் வாழ்ந்த வராகச் சொல்லப்படும் திருமூலரும் திருமந்திரம் என்ற நூலில் யாக்கை நிலையாமை பற்றியும், இளமை நிலையாமை பற்றியும், செல்வம் நிலையாமை பற்றியும் கூறியிருக்கின்றார். மனிதருக்கு இறப்பு பலவழிகளில் நேரலாம். திடீரென இதயத்துடிப்பு நின்று போவதால் இறப்பு ஏற்படுவது இந்நாளில் வழமையாகிவிட்டது. மாரடைப்பால் மாண்டார் என்ற செய்தி இலக்கியங்களில் அரிது. சிலப்பதிகாரத்தில் பாண்டியனும் பாண்டிமாதேவியும் அவ்வாறுதான் இறந்தார்கள் என்று உய்த்துணர முடிகிறது. ஆனால் மாரடைப்பால் இறத்தல்பற்றிய செய்தி முதன்முதலில் திருமந்திரத்தில்தான் காணப்படுகிறது. மனிதனுக்கு இருதயம் என்ற ஓர் உறுப்பு இருக்கின்றது என்பதை மேல் நாட்டார் கண்டறிந்து கூறுவதற்குப் பன்னூற் றாண்டுகளுக்கு முன்னரே இருதயம் என்று முக்கியமான ஓர் உறுப்பு உண்டு அது நின்று போனால் எல்லாமே நின்றுவிடும் என்பதை உலகுக்கு முதன்முதலில் எடுத்துக் கூறியவர் திருமூலரே.

உடம்பின் நிலையாமையைக் கூறவந்த திருமூலர் ஒருகாட்சியை நமது மனக் கண்முன்னே நிகழ்த்திக் காட்டுகின்றார். இதோ அந்த அவலக் காட்சி.

"வகை வகையாகச் சமைத்து வைத்தாள் அடிசிற்கினியாள். நனிநன்று நனிநன்று என்று கணவன் உண்டான். அதன்பின்னர் இல்லாளோடு அருகிருந்து பலதும் பத்தும் பேசி மகிழ்ந்தான். இருந்தாற்போல இடப்பக்கம் சற்று நோகின்றது என்றான். தூக்கி எடுத்து ஒரு பக்கத்தில் கிடத்தினார்கள். அதன் பின்னர் அவன் எழுந்திருக்கவே இல்லை. அவனுடைய ஆவி போய்விட்டது. இப்படியான வாழ்க்கையை நித்தி யமானது என்று நம்பி இறுமாந்தி ருக்கலாமா என்று கூறி உண்மையை உணர்த்துகிறார் திருமூலர். இதோ அந்த இருதயத்தைத் தொட்டு இருதய அடைப்பை விவரிக்கும் பாடல்.

*அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்*
*மடக்கொடியாரோடு மந்தணம் கொண்டார்*
*இடப்பக்கமே இறை நொந்தது என்றார்*
*கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந்தாரே*

நெஞ்சின் இடப்பக்கத்தில் இதயம் இருக்கின்றது என்பதையும் இதயத்தில் நோய் ஏற்பட்டு மாரடைப்பினால் மாந்தர் இறத்தல்பற்றி அன்றைய தமிழர் அறிந்திருந்தனர், என்பதையும் எண்ணிப்பார்க்கின்றபோது தமிழராகிய எமக்குப் பெருமை பிடிபடவில்லை. ஆனால் திருமூலர் கூறும் சிவவழி பாடு யாது என்பதை நாம் அறியாமல் வெறுமனே சடங்குகள்தான் வழிபாடு என்று நினைக்கிறோம் என்பதை நினைக்கக் கவலை மேலோங்குகிறது.

---

பாலில் ஊறவைத்த நெற்பொரிபோன்று வழ வழ கொழ கொழவென்று இருப்பவன் வாழ்க்கையில் எதற்கும் உதவான். உறுதிப்பாடே வடிவெடுத்தி ருப்பவன் வீரன் அவன் எதையும் சாதிக்கமுடியும்.

ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸர்

---

## குறித்து வைக்கவேண்டிய முக்கியதினங்கள்

| | |
|---|---|
| 24-10-95 | ஸ்கந்தஷஷ்டி விரதாரம்பம் |
| 27-10-95 | சதுர்த்தி விரதம் |
| 29-10-95 | ஸ்கந்த ஷஷ்டி விரதம் |
| 03-11-95 | உத்தான ஏகாதசி |
| 04-11-95 | சனிப்பிரதோஷ விரதம் |
| 06-11-95 | பூரணை விரதம் |
| 08-11-95 | கார்த்திகை விரதம் |
| 18-11-95 | ஏகாதசி விரதம் |
| 20-11-95 | பிரதோஷ விரதம் |
| 21-11-95 | போதாயன அமாவாசை |
| 22-11-95 | அமாவாசை விரதம் |
| 26-11-95 | சதுர்த்தி விரதம் |
| 27-11-95 | ஷஷ்டி விரதம் |
| 02-12-95 | ஏகாதசி விரதம் |
| 04-12-95 | பிரதோஷவிரதம் |
| 05-12-95 | திருக்கார்த்திகை விரதம் |
| 06-12-95 | பூரணை விரதம் |
| 07-12-95 | விநாயக விரதாரம்பம் |
| 18-12-95 | ஏகாதசி விரதம் |
| 19-12-95 | பிரதோஷ விரதம் |
| 21-12-95 | அமாவாசை விரதம் |
| 25-12-95 | சதுர்த்தி விரதம் |
| 27-12-95 | விநாயக ஷஷ்டி விரதம் |
| 01-01-96 | சுவர்க்க வாயில் ஏகாதசி விரதம் |
| 03-01-96 | பிரதோஷ விரதம் |
| 04-01-96 | இரவு நடேசர் ஆருத்திராபிஷேகம் |
| 05-01-96 | பூரணை விரதம் |
| 15-01-96 | தைப் பொங்கல் |

தொகுப்பு - அமுதா

KUMARANS

# KUMARANS
# குமரன்ஸ்
## தமிழ்க்கடை
## KUMARAN BOOK CENTRE

லீலா
தயாரிப்புகளின்
அங்கீகாரம்
பெற்ற
விநியோகஸ்தர்கள்

எம்மிடம்
தமிழ்
புத்தகங்களும்
விற்பனைக்குண்டு

அரிசிமா, குத்தரிசி, மிளகாய்த்துள் மற்றும் பல
லீலா தயாரிப்புகளை
எம்மிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்

அரசியல்
பொருளாதார புத்தகங்களோடு பெருமளவிலான
பிரபல எழுத்தாளர்களின்
கதைப்புத்தகங்களும் கிடைக்கும்

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி

**142-144 HOE STREET, WALTHAMSTOW,**
**LONDON E17**
**TEL : 0181 521 4955/0181 521 4411**
**FAX : 0181 521 9482**

# எம்மை நன்றாக இறைவன் ஏன் படைத்தனன்?

- S. சிவச்சந்திரன் -

ஒன்று

இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகட்கு முன்பு திருமூலநாயனார் தோன்றியவர் என பல கீழைத்தேச, மேற்கத்தைய ஆராய்ச்சியாளர், அறிஞர்கள் எழுதுகிறார்கள் , கூறுகிறார்கள்.

நாமும் கேட்கிறோம். படிக்கிறோம், கலந்துரையாடுகிறோம். சில வேளைகளில் "கற்றது கைமண் அளவு" என்பதை மறந்து கருத்து மோதல்களிலும் விவாதங்களிலும் ஈடுபடுகிறோம். இதனால் நன்மையும் தீமையும் ஏற்படுகின்றன.

"அன்பே சிவம்" என்றார் திருமூலநாயனார். "அன்பு இலார் எல்லாத் தமக்குரியர்" என்றார் திருவள்ளுவநாயனார்.

திருமூலர் அருளிச்செய்த திருமந்திரமாலை எனும் மறைநூல் மூவாயிரம் பாக்களைக் கொண்டது. இதனைப் பலர் தமிழ் மூவாயிரம் என அழைப்பர்.

சைவத்திருமுறைகள் பன்னிரண்டினுள் பத்தாவது திருமுறையாக திருமந்திரம் அமைகின்றது.

இம்மந்திரமாலையில் ஒரு பூம்பா பின்வருமாறு பகருகிறது.

பின்னை நின்றெண்னே பிறவி பெறுவது
முன்னை நன்றாக முயல்தவம் செய்கிலர்
என்னை நன்றாகஇறைவன் படைத்தனன்
தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறே

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறே"

என திருமூலநாயனார் ஏன் கூறினார் என்று நாம் சிந்திக்க வேண்டும் செயற்படவேண்டிய கடப்பாடும் எமக்கு வேண்டும்.

கலசம் இதழும் இதனைக் கூறுகிறது.

"ஈசன் நெறி பரப்ப இன் தமிழ் வளர்ப்போம்."

எம்போன்ற அன்பர்கள் பலர், மேற்கூறிய திருமூலரின் வாக்கியங்களை ஆராய்ந்தபோது தமிழ் மொழி தெரிந்தால் தான் இறைவனை அறியவும் அடையவும் முடியும் என உணர்கின்றோம். காரணங்கள் பல.

சொல்லிய பாட்டின் பொருளை உணர்ந்து
சொல்லவில்லை என்றால் சொல்லற்க
சொல்லில் பயனிலாச் சொல்.

சொல்லற்கரியானை மாணிக்கவாசகர் சிவபுராணத்தில் சொல்லுகிறார். எப்படிச் சொல்லுகிறார் என்றால் தாயினும் சிறந்த தயாவான தத்துவன் கடவுள் ஒரு தத்துவம் என்கிறார்.

இறைவனை, சிவனை, சொற்றுணைவேதியன் சோதி வானவனை சோதியனை (புறந்தார்க்கு யோதி) துன்னிருள் ஆனவனைத் தோன்றாப் பெருமையன் என்கிறார் மாணிக்கவா சகப்பெருமான். இப்பேற்பட்ட சொல்லற்கரியானை திருமூலர் எவ்வாறு சொல்லுகிறார் என்றால்

யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
வான் பற்றி நின்ற மறை பொருள் சொல்லிடின்
ஊன் பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான் பற்ற பற்றத் தலைப்படும் தானே.

திருமூலர் இறைவனை "வான் பற்றி இருக்கின்ற மறைபொருள் என்கின்றார்.

திருமூலர் மாணிக்கவாசகர் போன்றோரைப் பார்த்து திருவள்ளுவ நாயனார் என்ன கூறுகின்றார் என்றால்

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டிவிடும்.

மறைமொழியால்(தமிழ் மொழி) வான் பற்றி நின்ற மறைபொருளை வேண்டுதல் வேண்டாமை இலானை ஆதியும்அந்தமும் இல்லா அரும் பெரும் சோதியை அருவமும் உருவமுமாகி அநாதியாய் பலவாய் நிற்பவனை என்று சொல்லிப் பாடிவிட்டுச் செல்கின்றார். இதன் தத்துவங்களை அறிய அனுபவிக்க முடியாத நாயிற் கடையாய் கிடந்த எமக்குப் பல சமயங்களைத் தோற்றுவிப்பவர்களின் காலை வருடி வாழப்படாது என்பதற்காக கருங்கல்லிலேயே லிங்கம் சிலை சிற்பங்களை ஏற்படுத்தியும் அருட்பாக்களைப் புனைந்தும் சித்திரங்களிலே தத்துவத்தையும் புராணங்களையும் புகுத்திவிட்டு மறைந்தார்கள்.

நாய் நன்றி உள்ள மிருகம். தன்னை வளர்த்தவர்களை மறவாது பாதுகாக்கும். எம்மை வளர்த்தவர்களை வழி காட்டியவர்களை நாம் சிலவேளைகளில் மறந்து வழி தெரியாமல் தடுமாறி வாழ்கின்றோம் என்பதை உணர்ந்த மறைமொழி மாந்தர் இவர் பலராகிய காரணம் நோற்கும் சிலர், தோன்றாப் பெருமையன் ஆகிய சிவனுக்கு தோற்றம் கொடுத்தார்கள். வடிவம் கொடுத்தார்கள். மந்திரம் கொடுத்தார்கள். அருட்பாக்களை அருளிச் சென்றார்கள்.

இதை உணர முடியாத எம்மில் சிலர் தமிழ் கடினம் தமிழ் கடினம் என்று அரற்றித் திரிகின்றோம். இப்படிக்கூறும் நாம் கூசாமல் கடவுளைக் கற்பித்தவன் முட்டாள் என்று பிதற்றியவர்களின் வாசகங்களை அதுவும் சேயோன் (புறந்தார்க்கு சேயோன்) மொழிகளில் படித்துவிட்டு பிதற்றித் திரிகின்றோம்.

எனவே ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்க்க விரும்பும் அன்பர்கள் ஆதரவாளர்கள் என்ன ஆற்ற வேண்டும் எனத் திருமூலர் கூறுகின்றார்.

சிவனொடொக்குந் தெய்வந் தேடினும் இல்லை
அவனொடொப்பர் இங்கு யாவரும் இல்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னுந்
தவனச் சடைமுடித் தாமரையானே.

இன்னும் வரும்......

# அப்பர் செய்த புரட்சி

செல்வநாயகி முத்தையா

உலகிலே உயிர்கள் எல்லாவற்றுக்கும் தாயும் தந்தையும் உண்டு. இதை மறுக்கும் சமயமோ மதமோ நாடோ தேசமோ கிடையாது. இறைவனை அம்மை அப்பனாக உணர்ந்த சைவசமயம் நமக்கு அம்மை வேறு அப்பன் வேறு எனத் தோன்றா



திருக்கவே இறைவன் அம்மை அப்பனாகக் காட்சி தருகின்றான். இதனால் எல்லாப் பக்தர்களும் இறைவனைத் துதித்துத் தோத்திரம் புரிகின்ற போது அம்மையை முதலாக வைத்துத் தோத்திரம் புரிகின்றனர். ஏனெனில் பிறந்து விழித்தவுடன் தாய் தான் காட்சியளிக்கின்றாள். தாய் காட்டினால் தான் குழந்தைக்குத் தந்தை தெரியும். இதை மாணிக்க வாசகரும் திருவாசகத்தில் மிக உருக்கமாக அம்மையே, அப்பா ஒப்பிலா மணியே எனவும் மூன்று வயதில் திருஞானசம்பந்தர் அம்மா அப்பா என்றழைத்தும் இராமலிங்க வள்ளலார் அம்மை அப்பாயினியாற்றேன் என்றும், ஔவையார் அன்னையும் பிதாவும் முன்னெறிதெய்வம் என்றும் கூறியதிலிருந்தும் மாத்ருதேவோபவ பித்ருதேவோபவ என்ற மந்திரங்களாலும் அறிகின்றோம். எனவே அம்மை, அப்பன் என்று அழைக்கும் மரபு நம்மிடை தொன்று தொட்டு நெடுங்காலாமாகவுண்டு.

அப்பர் பெருமான் மட்டும் ஒரு புரட்சி செய்தருளினார். இறைவனைத் துதித்து அப்பன்நீ அம்மை நீ ஐயனும் நீ என்று பாடினார் எல்லோரையும் போலல்லாது தந்தையை முன் வைத்துப் பாடியருளினரே ஏன்?

தூலமாக நோக்கினால் உயிர்கட்கு தாய் தான் முதல் உறவு. சூக்குமமாக நோக்கினால் தந்தை தான் முதல் உறவு. உயிர் உடம்பை விட்டு நீங்கி பின் இரண்டு வழியாகச் செல்கின்றது. ஒன்று ஒளி மார்க்கம் மற்றது இருள்வழி . இதை அர்ச்சாதி மார்க்கம், தூமாதி மார்க்கம் என்று வட நூலார் சொல்லுவார். அர்க்சஸ் என்பது ஒளி. தூமம் என்பது புகை. புண்ணியம் புரிந்து உயிர் ஒளியாகச் செல்வது புண்ணிய உலகத்தில் இன்பத்தை நுகரும். பாவம் புரிந்த உயிர் இருள் வழியாகச் சென்று நரக உலகம் சென்று துன்பத்தை நுகரும். சுவர்க்கமும் நரகமும் உண்டு என்பதை திருவள்ளுவர் ஒரே குறளில் கூறுகின்றார்.

அருள் சேர்ந்த நெஞ்சினார்க்கில்லை
இருள்சேர்ந்த இன்னாவுலகம்.

அருள் நிறைந்த உள்ளத்தோர் இருள் நிறைகின்ற உலகம் புகமாட்டார்கள்.என்ற படியால் அருத்தாபத்தி நியாயமாக அருள் நிறைந்த உள்ளத்தார் ஒளி நிறைந்த இன்ப உலகம் புகுவார் என்பது பெறப்படும். எனவே இன்ப உலகம், துன்ப உலகம் உண்டு என்று வள்ளுவர் வாக்கினால் உறுதிப்படுகின்றது.


ஆதலால் சுவர்க்கமும் நரகமும் உள்ளனவோ என்று ஐயுறுதல் கூடாது.

சுவர்க்க உலகத்தில் இன்ப நுகர்ச்சியும் நரக உலகில் துன்ப நுகர்ச்சியும் துய்த்து முடிந்த பின் அவ்வுயிர் விண்ணினின்றும் மழைவழியாக மண்ணுலகத்திறகு வரும். வந்து நீரிலே கலந்து காய்கனிதானியங்களிலே சேர்ந்து அறுபது நாள் கருவிருந்த பின் பெண்ணிடத்திலே சேர்கின்றது. ஆகவே ஒவ்வொரு உயிரும் தந்தையிடம் கருவிருந்த பின்னர் தாயிடம் சேர்கின்றது. ஒவ்வொருவரும் பெயருக்கு முன் தந்தையின் பெயரின் முதலெழுத்தை வைத்து எழுதுவர். இதை யாவரும் ஒப்புக்கொள்ள வேண்டியதும் மறுக்க

முடியாத உண்மையுமாதலின் எந்தப் பெண்ணும் இதைப்பற்றி விவாதிப்பது கிடையாது.

மகனே நான் தான் உன்னை பத்து மாதங்கள் சுமந்து பெற்றேன் பசி தீரப்பால்கொடுத்தேன், வளர்த்தேன். என் பெயரை முதலில் வைக்காமல் சும்மாயிருந்த உன் அப்பாவின் பெயரை சுமக்கின்றனையே, இது நீதியா! முறையா! இது தருமமா! எனக் கேட்டுப் பின் சிந்தித்து, அப்பா பெயர் பாண்டுரங்கன் அம்மா பெயர் விசாலாட்சி என்றிருந்து தந்தை பெயர் முதல் எழுத்து பா. தாய்பெயர் முதல்எழுத்து வி. இரண்டும் சேர்நதால் எப்படியாகும்? பாவி என்றாகும். தன் குழந்தைக்கு பாவி என்று முகவரி வருவதை எந்தத் தாயும் விரும்புவாளா இல்லை என் உயிர்க் கணவன் பால் இருந்து வந்தபடியால் பிதாவின் பெயரை அமைப்பதுவே முறை என்று அறிந்துள்ளனர். ஆனபடியால் எல்லா உயிர்களும் தந்தையிடத்தில் தங்கிய பின்னர் தாயிடம் வந்து சேருகின்றன. இந்த உண்மையை உலகம் உணரும் பொருட்டு அப்பர் அடிகள் இந்தத் தேவாரத்தைப் பாடியுள்ளார். நாமும் நம் மெய்யுருக ஏங்கிப் பாடினால் எம் முன்னும் இறைவ னுடன்இறைவியும் சேர்ந்தருள் புரிவார்கள்.

**அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ**
**அன்புடைய மாமனும் மாமியும் நீ**
**ஒப்புடைய மாதரும் ஒன்பொருளும் நீ**
**ஒரு குலமும் சுற்றமும் ஒருரும் நீ**
**துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய் நீ**
**துணையாய் என் நெஞ்சந்துறப்பிப்பாய் நீ**
**இப்பொன் நீ இம்மணி நீ இம்முத்தும் நீ**
**இறைவன் நீ ஏறுர்ந்தசெல்வன் நீயே.**





# நேர்த்தி வழிபாடு

## கவிஞர் ஞானமணியம்

நேர்த்தி வழிபாடு என்றால் இறைவனுக்குச் செலுத்தும் பிரதி உபகாரம் போன்றதே என்பது புறக்கருத்துக் கொள்வாரின் உட்க ருத்தாகும். அது தவறு என்பதும் அவர்கள் அறியாத புதிராகும். அவர்களுக்கு அன்பாக உணர்த் துவது அறிந்தவர்கள்கடனாகும். இந்துமதத்தில் மாத்திரம் இந்தநேர்த்தி வழிபாடு இருக்கவில்லை எந்த மதத்திலும் இருப்பதை நாம் அறிவோம். இறைவன் கருணையை எல்லோர்க்கும் வெளிப்படுத்துவதே நேர்த்தி வழிபாடாகும். தெய்வங்களின் அனுக்கிரகங்களைத் தெண்டனிடும் பக்தர்களுக்குத் தெரியப்படுத்துவதே நேர்த்தி வழிபாடாகும். நாம் செய்துவரும் தூயபக்தியின் பயனாகவும் மனமொன்றிய மன்றாட்டத்தின் விளைவாகவும் எண்ணி வழிபடும் தெய்வமே நம்மை வாழ்விக்கும் என்ற திட நம்பிக்கையுடன் இயற்றிய பக்தியின் சித்தியாகவும் தெய்வங்கள் நமக்கு அருளிச் செய்யும் அற்புதங்களை அனைவரும் அறியச் செய்யும் ஆனந்தவழிபாடே நேர்த்திக்கடன் செலுத்துகின்ற இந்த நேர்த்தி வழிபாடாகும். நேர்த்தி என்றால் தெய்வங்களின் அனுக்கிரகங்களையும் தீராத வினைதீர்க்கும் விமோச னங்களையும் எதிர்பார்த்து நிச்சயிக்கும் ஓர் உறுதியான வழிபாடாகும். அத்துடன் நேர்த்தி என்றதும் கீர்த்தி, சிறப்பு, மேன்மை, புகழ், புனிதம் தெய்வீகம், ஆனந்தம்

என்றெல்லாம் இனியவிதமான கருத்துக்கள் நமக்குப் புலப்படுவதும் இயல்பாகும். இந்துமறை மாண்புகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்கள் வாயிலாகவும் பஞ்சகாவியங்கள் மூலமாகவும் நீதி நிலைக்கும்படியாக நிகழ்ந்துள்ள தெய்வத் தீர்ப்புக்களைத் தெரிந்து கொண்டவர்கள் நாம். அவைகளைத் தெய்வ அனுக்கிரகங்கள் என்றே உணர்ந்து கொண்டவர்கள் நாம். அவ்வாறே துறவிகளின் தூய போதனைகளாலும் ஆத்மீகஞானிகளின் அறிவுரைகளாலும் இறைவன் திருவருளை இனிதே தெரிந்து கொள்ளுகின்றோம். அதனால் நாமும் அவர்களைப் போல் இறைவன் வழிபாட்டில் ஈடுபடுகின்றோம். இனிய வரங்களைப் பெற்று இன்ப மடைகின்றோம். ஆனால் மற்றவர் சொல்லும் தெய்வீக மகிமைகளை கற்றுக்கொள்ளும் நாம் நமது வழிபாட்டாற் பெற்றுக்கொள்ளும் வரப்பேறுகளை மற்றவர்களுக்கும் அறிவிக்க வேண்டாமா? அதனால் இறைவன் பெருங் கருணை எல்லோ ராலும் உணரப்பட்டு இந்த உலகத்தில் மென்மேலும் விளங்கவேண்டா மா? மேன்மையடைய வேண்டாமா?

ஆகவே தான் நாம் எண்ணி இருந்தவாறு நேர்த்திக் கடன்களை இறைவன் சந்நிதானங்களிற் தவறாமல் நிறைவேற்றி மன்றாடுகின் றொம். கேட்டவரம் கிட்டியதும் நிச்சயித்துக் கொண்டவாறு நேர்த்திகளைப் பூர்த்தி செய்து பூசை ஆராதனைகளும் ஆற்றிப் போற்றி மகிழ்ந்து ஆத்ம திருப்தியுடன் பூரிப்படைகின்றோம். திருவிழாக்கள் தேரோட்டங்கள் தீர்த்த உற்வசங்கள் திருநாட் பூசைகள் பெருநாள் அஞ்சலி வைபவங்கள் போன்ற மகோன்னத மன்றாட் டங்களாலும் இவைபோன்ற பல்வேறு பக்தி முறைகளாலும் தெய்வங்களைத் துதிக்கின்ற நாம் இவைகள் அத்தனைக்கும் சிகரமாகவே இந்த நேர்த்தி வழிபாட்டை செய்து வருகின்றோம்.

பண்டுதொட்டே பாரம்பரிய வழமையாக விளங்கும் நமது வழிபாட்டு விதிகளின் மத்தியில் நேர்த்தி கடன்களை நிறைவேற்றும் திருப் பூசைகளும் நேர்த்திச் சின்னங்களைச் செலுத்தும் திருப்பணிப் பூசைகளும் நிகழ்ந்து வருவதை ஆலயங்கள் தோறும் நாம் காணலாம். பக்தர்களின் நேர்த்தி வழிபாட்டுச் சின்னங்கள் ஆலய விதிகளை அலங்கரிக்கின்றன. ஆலயங்களின் காவல் அரண்களாகக் காட்சியளிக்கின்றன. சித்திரக் கோபுரங்களாக விளங்குகின்றன. தீர்த்தக் கேணிகளாகத் தோற்றிரி ருக்கின்றன. தெய்வங்கள் பவனி வரும் வண்ணத் தேர்களாகத் தலங்களிலே வலம் வருகின்றன. விளக்கொளி பரப்பும் தம்பங்களாக நிற்கின்றன. தேவஸ்தான விடுதிகளாக நிலைத்து நிற்கின்றன. இவ்வாறாக இன்னும் எத்தனையோ வகையில் நேர்த்திச் சின்னங்கள் விளங்குகின்றன. தெய்வங்களின் அருள் வளத்தை மானிடர்களுக்கு தெளிவாக உணர்த்தக் கூடிய ஒரு தெய்வீகமான வழிபாடுதான் நேர்த்தி வழிபாடென்றால் அது ஒருபோதும் மிகையாகாது. தெய்வங்கள் மீது திட நம்பிக்கை கொள்ளும் எவருக்கும் அவ நம்பிக்கையும் இல்லை. அவர்களுக்கு ஏமாற்றங்களும் இல்லை என்னும் அழியாத உண்மையைத் தான் நேர்த்தி வழிபாடு என்னும் இந்த அற்புதமான தத்துவ மன்றாட்டம் நிலை நாட்டு கின்றது.

## அருள்விருந்து

### சுவாமி சித்பவானந்தர்

அவாவை அறுத்தவன் அமைதியை அடைகின்றான்.

நாம் தேடும் இன்பம் எம்மிடமே உண்டு.

அல்லல்களைப் போக்க ஆத்மசக்தி உதவுகின்றது

சிந்தையும் செயலும் நல்லனவாக வேண்டும்.

உள்ளத்தில் உலக ஆசை புகுத லாகாது.

ஆசையுறும்வரை பிறப்புக்கள் சம்ப விக்கும்.

மனிதனை உருவாக்குவது அவன் எண்ணம்.

கொடுப்பவனுக்கு என்றும் மேன்மை உண்டு.

நல்லனவையும் அழகியனவும் கடவுள் தந்தவை.

சுகமுள்ள இடத்தில் துக்கமும் மறைந்துள்ளது.

நல்லவன் நலன்கள் நாடெங்கும் பரவும்.

பற்றற்ற பயமற்ற சினமற்ற மனமே சீரியது.

முகமலர்ச்சி அறிவை நன்றாக வளர்க்கிறது.

வெறுப்பு வேற்றுமையை வளர்க்கிறது.

கோபமற்ற மனம் மிகவும் வலியது.

அச்சம் உள்ளவனுக்கு மரணபயம் அதிகம்.

அறநெறியில் சார்ந்தவன் பரமபத மடைவான்.

ஆசைகளை அகற்றியவன் தூயவ னாகிறான்.

தெய்வ நம்பிக்கையால் உறுதி நேர்மை வளருகின்றன.

தொண்டன் உள்ளத்தில் அன்பு மிகுந்திருக்கும்.

மனத்துக்கு உகந்த உணவு கல்வி யேயாகும்.

மனித மேன்மையை வெளிப்படுத்து வது பிரார்த்தனை.

சேவை செய்யச் செய்ய ஆற்றல் அதிகரிக்கும்.

உலகப் பற்றை இறைவன் திரு நாமம் அகற்றுகிறது.

பேராசை மனிதனைப் பாழ்ப டுத்துகின்றது.

தொகுப்பு-ராணி

# ஐயம் தீர்க்கும் அறிவுரைகள்

சிவஸ்ரீ நாகநாதசிவம் குருக்கள்

## *கோயில்களிலே மூன்று காலப் பூசை, ஆறுகாலப் பூசை என்று நிகழ்கின்றன. இந்தப் பூசைகளுக்கு இடைப்பட்ட காலங்களில் திரை போடுகிறார்களே! இதன் காரணமென்ன?*

இதற்கு ஒரு கணக்கு இருப்பதாகச் சொல்கிறார்கள். நாம் உயிர் வாழ்வதற்காக மூச்சு விடுகிறோம். ஒவ்வொரு நிமிடமும் இத்தனை தடவை மூச்சு விடுகிறோம் என்று கணக்கு உண்டு. உத்தராயணம், தக்ஷணாயணம் என்று இரு காலங்களையும் சேர்த்து ஒரு வருடம் என்று சொல்வது நமது பழக்கத்திலே உள்ள ஒரு கணக்கு. நமது ஒரு வருடம் தேவர்களுக்க ஒரு நாள். தேவர்களின் ஓராண்டு பிரம்மாவுக்கு ஒரு நாள். பிரம்மாவின் ஓராண்டு விஷ்ணுவுக்கு ஒரு நாள். விஷ்ணுவின் ஓராண்டு காலம் பரமாத்மாவான சிவனுக்கு ஒரு நாள். இந்தக் கணக்குப்படி சிவன் நமது ஒருநாளில் ஆறுதடவை மூச்சு விடுவதாக வரும். அதாவது ஒருநாளில் சிவன் ஆறுதடவை மூச்சை உள்ளே இழுத்து வெளியே விடுவதாகக் கணக்கு. சுவாசப்பை ஆறு தடவை மூடித்திறப்பதையே திரை இழுப்பதன் மூலம் குறிப்பிடப்படுகிறது. ஆலயங்களிலே உள்ள ஒவ்வொரு கதவுக்கும் எத்தனை தடவை திறந்து மூடவேண்டும் என்று கணக்கு உண்டு. சில பழைய ஆலயங்களில் இன்றும் இந்த முறைகளைக் கையாண்டு வருகிறார்கள். விசேட தினங்களில் பக்தர்களின் வசதிக்காக சில வேளைகளில் அதிக நேரம் கதவு திறந்துவிடும் வழக்கம் இருந்தாலும் பழைய முறைகளைக் கடைப்பிடிப்பது நல்லது.

## *கோயில்களில் பிரதக்ஷணம் (வலம் வருதல்) செய்வது ஏன்?*

கோயில் என்பது புனிதமான இடம். நான் வீட்டிலேயே சாமி கும்பிட்டுவிட்டேன், கோயிலுக்குப் போக வேண்டுமா? என்று சிலர் கேட்கலாம். இதுபற்றி – ஆன்மார்த்த பூசை, பரார்த்த பூசை பற்றி முந்திய பதில்களிற் குறிப்பிட்டுள்ளேன். எந்த இடத்திலே எந்த விதமான வெளிப்பாடு இருக்கிறதோ அந்த இடத்திலே அந்த ஈடுபாடு அதிகமாக இருக்கும். உதாரணமாக வீட்டிலே இருக்கும் நீங்கள் சமையற் கட்டுக்குப் போனால் வயிறு பசிப்பது போல இருக்கும். அல்லது அங்குள்ள எதையாவது எடுத்து வாயிலே போடத் தோன்றும். படுக்கையறைக்குப் போனால் தூக்கம் வரும். ஏனென்றால் நாம் அததற்கென்று இடங்களை ஒதுக்கி வைத்திருக்கிறோம். அதனால் அந்தந்த இடங்களில் அந்தந்த ஆதிக்கம் இருக்கும். ஆனால் வீட்டிலே பலபல எண்ணங்களுக்கும் இடம் இருப்பதால் பூசை அறை இருந்தாலும் முழுமையாக மனதை ஒருமைப் படுத்துவது கஷ்டம். ஓரளவுதான் வழிபாடு செய்யலாம். கோயிலிலே எப்பொழுதும் வேத தேவார பாராயணங்கள், பக்திச் சொற்பொழிவுகள் முதலியன நடப்பதால் இறை ஆதிக்கம் அங்கு அதிகமாக இருக்கும். இறை சிந்தனையும் ஆத்ம திருப்தியும் கோயிலிலே ஏற்படும்.

கிருபானந்தவாரியார் உதாரணமாகச் சொல்வார்கள், பசு முழுவதும் பால் இருந்தாலும் அதன் மடியிலேதான் பால் சுரக்கும் என்று. பசுவின் வயிற்றிலே குற்றிப் பால் எடுக்க முடியாது. அதுபோல இறை ஆதிக்கம் கோயிலில் அதிகம் இருப்பதாலும் பஞ்சபூதத் தொடர்பு ஏற்படுத்த ஏதுவாக இருப்பதாலும் கோயில் அவசியம் தேவைப்படுகிறது. அந்தக் கோயிற் கர்ப்பக்கிருகத்தின் சக்தி நாம் பிரதக்ஷணம் பண்ணும்போது நமக்குப்படுகிறது. கோயில் வலம் வருவதால் உடலுக்கு வலுவும் உள்ளத்துக்குத் தெளிவும் ஆன்மாவுக்குத் திருப்தியும் ஏற்படுகிறது.

பிரதக்ஷணங்களிற் பலவகையுண்டு. அங்கப் பிரதக்ஷணம் செய்தால் எவ்வளவு பலன் என்று அளவிடமுடியாது என்று சொல்வர். அவ்வளவு பலன் அதற்குண்டு, உத்தமமானது. பெண்களுக்கு நமஸ்காரப் பிரதக்ஷணம் என்று உண்டு. விநாயகரை ஒருமுறையும், விஷ்ணு, தேவி முதலியோரை நாலு முறையும், அரசமரம் போன்ற

விருக்ஷங்களை ஏழு முறையும், பொதுவாக மற்றைய தெய்வங்களை மூன்று முறையும் வலம் வரவேண்டும் என்று முறையுண்டு. 1,3,4,5,7,9 என்று வலம் வருவதற்குப் பல கணக்குகள் உண்டு. இந்தக் காலத்தில் எவ்வளவு சுருக்கமாகப் பண்ணமுடியும் என்றுதான் கேட்பார்கள்.

## நித்திய நைமித்திய பூசைகளில் தினமும் நடப்பதான நித்திய பூசை பற்றிக் குறிப்பிட்டீர்கள். நைமித்திய பூசை, அதாவது திருவிழாக்களின் தத்துவம் என்ன?

நம்முடைய சைவ சித்தாந்தத்தின் இயக்கமே சிவபெருமான் பஞ்ச கிருத்தியங்களைச் செய்கிறார் என்பதுதான். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பனவே அந்த ஐந்து தொழில்கள். இவை எப்படி நடக்கின்றன என்பதை ஆன்மாக்களுக்குத் தெரியப்படுத்துவதே திருவிழாக்களின் நோக்கம்.

உலகம் எப்படி உண்டாகிறது? புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகி என்று மாணிக்க வாசகர் திருவாசகத்திலே குறிப்பிட்டார். புல்லிலிருந்து ஆரம்பித்து மனிதர் தேவர் வரையான பிறப்பெடுத்து இறைவனை அடைவதுதான் ஆன்மலக்ஷணம். இந்த எல்லா ஜீவராசிகளிலும் இறைவன் வியாபித்திருக்கிறார்.

திருவிழாக்களில் அங்குரார்ப்பணம் என்று பாலிகை போடுகிறோம். எல்லாத் தானியங்களையும் போட்டு முளைக்க வைக்கிறோம். அதுதான் உலக உற்பத்தி. பின் கொடியேற்றம். இது சிருஷ்டி ஆரம்பமாகிவிட்டது என்பதை அறிவிக்கிறது. தொடர்ந்து ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வாகனத்திலே இறைவன் வலம் வருகிறார். எல்லா ஜீவராசிகளிலும் இறைவன் அடக்கம் என்பதை இது காட்டுகிறது. தேர்த் திருவிழா சங்கார கிருத்தியம். தேரின் அமைப்பு கிட்டத்தட்ட உருண்டை வடிவமாக, பூகோளம் போல இருக்கும். அதிலே எல்லா உயிரினங்களினதும் உருவங்கள் அமைக்கப்பட்டிருக்கும். தேரை அலங்கரிக்கும்போது வாழைக் குலை, இளநீர், காய்கள் என்றெல்லாம் கட்டி பூலோகமாகவே தேரைப் பாவித்து இறைவனை எழுந்தருளப் பண்ணுகிறோம். கோயிலுக்கு வரும் எல்லாரும் தேர் உற்சவத்திலே பங்குகொள்ள வேண்டும். எல்லோரும் தேரிலே ஏறமுடியாது என்பதால் உலக பாசமாகிய நீண்ட வடம் தொடுத்து எல்லோரும் அதிலே தொட்டு இழுப்பதால் அனைவரும் பங்குகொண்டதாகப் படுகிறது. 12மைல் தூரத்துள் நடக்கும் தேரில் பங்குகொள்ளாதவர்கள் பாவிகள் என்று சொல்லப்படுகிறது.

தேர் சுற்றி முடிந்ததும், நடராஜதரிசனம் அல்லது தேர் பார்ப்பது என்று சொல்வார்கள். அதாவது தேரடியில் சிறிது வைக்கோல் போட்டுக் கொளுத்திவிடுவார்கள். பழையகாலத்தில் தேர்த்திருவிழா முடிந்ததும் தேரையே எரிக்கும் வழக்கம் இருந்ததாகச் சொல்கிறார்கள். இப்போதெல்லாம் பல லக்ஷம் செலவு செய்து தேர் அமைப்பதால் அது முடியாத காரியம். இந்த எரிப்ப வைபவந்தான் சம்ஹாரம். அடுத்த நாள் தீர்த்தம். அழிவு முடிந்து ஆன்மாக்கள் அனைத்தும் பிரளயத்தில் போவது தீர்த்த உற்சவம். அதுதான் நாம் தீர்த்தமாடுவதன் பொருள்.

எந்தக் கோயிலில் திருவிழா நடக்கிறதோ அந்த மூர்த்தியின் அடிப்படையில் வாகன அமைப்பும் திருவிழா நாட்களின் எண்ணிக்கையும் அமையும். இதற்கு விதிமுறைகள் உண்டு. மனித வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட கல்யாணம் கூட திருக்கல்யாண உற்சவமாக அமைகிறது. இதுதான் திருவிழாக்களின் தத்துவம்.

## வீடுகளிலும் ஆலயங்களிலும் இன்ன இன்ன அளவுதான் வழிபாட்டுக்குரிய சிலைகளின் அளவு என்று உண்டா? ஏன்?

ஆன்மார்த்த பூசை. பரார்த்த பூசைகளுக்கு இன்னின்ன அளவில் சிலைகள் இருக்கவேண்டும் என்று விதிகள் உண்டு. வீட்டிலே வழிபடும் சிலைகள் ஆறு அங்குலத்துக்கு மேற்படாமல் இருக்கவேண்டும் என்று விதியுண்டு. பரார்த்த பூசைச் சிலைக்கு ஆத்மார்த்த பூசை செய்வது தவறு. 2 வயதுக் குழந்தைக்கு ஒரு பத்து வயதுப் பையனின் அளவு சாப்பாட்டைக் கொடுக்க முடியுமா? அதுபோலத்தான் இதுவும்.

# அணங்கினர் அவை



**அணங்கினர் அவையை இறையருள் பெற்ற மகளிரும் இறையடியார்களின் அருட்கனிவில் திளைத்தும் நம்மவர்களால் அறியப்படாத மாதரும் பொலிவிப்பர். அவற்றுடன் பெண்கள் விரும்பும் கலைகளும் அதில் சிறந்து விளங்கிய பெண்டிரும் பாடல்களும் சிறு குறிப்புகளும் பரிமளிக்கும்.**

**-சாலினி-**

பொங்குருச் செல்வங் கல்வி பொருவிலா வாய்மை, தூய்மை
இங்கெமக்கருள வல்ல இணையிலா எம்பிராட்டி
பங்கயத் தடஞ்சூழ் கூடற்பவளமால் வரையை நீங்கா
அங்கயற் கண்ணி மங்கை அடிக்கமலங்கள் போற்றி
-திருவிளையாடற் புராணம்

## மனைவி எனும் அருளமுதம்.

காதல் மனையாள் கலங்குகின்றாள். தன் கருத்துக்கினிய கணவன் கருத்தழிந்து தந்திரங்களில் சிறந்து விளங்கும் சமண சமயத்தை ஆதரிப்பதை எண்ணி அவன் ஒரு தனிமனிதனா? இல்லையே ஒரு நாட்டின் தலைவன், சமுதாயத்தை நடத்திச் செல்ல வேண்டிய அரசன். அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி அல்லவா? தன் கணவனின் செய்கை குடிமக்களை சமணர்களாக மாற்றுவதை பார்த்து இரத்தக் கண்ணீர் சொரிகின்றாள்.

சோழப் பேரரசனின் மகளாகப்பிறந்து மங்கையற்கரசியார் பாண்டியன் மனைவியாக வந்தவள்

"மங்கையர்க்கரசி வளவர்கோன்பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமாதேவி"
(சம்பந்தர் தேவாரம்)

தான்பிறந்த குடிப்பெருமையும் புகுந்த குடிப்பெருமையும் வாழவழி செய்யவேண்டியது அவள் கடமை. எனவே தங்கள் மந்திரியாகிய குலச்சிறையாரை அழைத்து இதற்கு என்ன செய்வது என வினவுகின்றாள்.

அதற்கு குலச்சிறையார் சீர்காழியில் பிறந்து மூன்று வயதில் தேவாரம் பாடி பல அற்புதங்களை நிகழ்த்திக் கொண்டிருந்த திருஞானசம்பந்தரின் பெருமைகளைக் கூறுகின்றார். சமணர்களின் மந்திர தந்திரங்களுக்கு ஈடு கொடுக்கக் கூடியவர் சம்பந்தரே என உணர்ந்த மங்கையர்க்கரசியார் அவரை அழைத்து வரப்பணித்தார். குலச்சிறையாரும் திருமறைக்காட்டில் (வேதாரணியம்) இருந்த சம்பந்தரை அழைத்து வர ஏற்பாடு செய்தார்.

மதுரைக்கு சம்பந்தர் வந்ததை அறிந்த சமணர்கள் அரசனிடம் முறையிட்டார்கள். அவனும் நீங்கள் செய்வதைச் செய்யுங்கள் என்று கூறிவிட்டான். அதனால் சமணர்கள் சம்பந்தர் தங்கியிருந்த மடத்திற்கு தீ வைத்தார்கள் மடம் எரிவதைக் கண்ட சம்பந்தரும் **"பையவே சென்று பாண்டியர்க்காகவே"** எனத் தேவாரம் பாட மடத்தின் தீ அணைந்தது. ஆனால் அத்தீயின் வெம்மை பாண்டியனிடம் சென்று புகுந்தது. அவன் வெப்பு நோயால் அவதிப்பட்டான். சமணர்கள்

வந்து மந்திரங்கள் சொல்லி மயிற்பீலியால் தடவியும் அவனின் நோய் மாறவில்லை.

மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் பாண்டியன் நெடுமாறனுக்கு சம்பந்தரைப் பற்றிக் கூறினார்கள். பாண்டியனும் சம்பந்தரை அழைத்து வரச் சொன்னான். சம்பந்தரும் வந்தார். அவன் சிறுபிள்ளையாக இருப்பதைக் கண்ட மங்கையர்கரசியார் வருந்தினார். அரசி மாதேவியைப்பார்த்து

**மானினேர்விழி மாதராய் வழுதிக்குமாபெருந் தேவிகேள்**
**பானல்வாயொரு பாலனீங்கிவனென்று நீபரிவெய்திடேல்**
**ஆனைமாமலை யாதியாய இடங்களிற்பல அல்லல்சேர்**
**ஈனர்கட்கெளியேனலேன் திருவாலவாய் அரனிற்கவே**

எனப் பதில் கூறினார். அரசி மகிழ்ந்தாள் பின்னர் அரசனின் விருப்பப்படி வலப்பக்க நோயை சம்பந்தரும் இடப்பக்க நோயை சமணர்களும் நீக்குவதென்றும் யார் முதலில் நோயை நீக்குகிறார்களோ அவர்கள் சமயத்தை அரசன் தழுவுவதாகவும் முடிவாயிற்று.

சம்பந்தர் "மந்திரமாவது நீறு"எனத் தேவாரம்பாடி அரசனின் வலப்பக்கத்திற்கு திருநீறு இட்டார். வலப்பக்கம் குளிர இடப்பக்கம் வெம்மை கூடியது. பாண்டியன் இடப்பக்க நோயையும் சம்பந்தரையே நீக்கச் சொன்னான். அவனின் வெப்புநோய் நீங்கிற்று.

சம்பந்தர் சிறு குழந்தை என்பதையும் பொருட்படுத்தாது ஞானசம்பந்தரைத் தொழுதெழுதான். நெல்வேலி செருக்களத்து வென்ற பாண்டியனாக கூன் பாண்டியனாக இருந்த நெடுமாறன் தன் கணவனின் மனககூனுடன் உடற்கூனும் நிமிர்ந்ததை பார்த்து அதிசயித்தாள் பாண்டிமாதேவி. சம்பந்தரின் அருளால் வெப்புநோயுடன் பாண்டியனின் கூனும்போய் நின்ற சீர்நெடுமாறன் ஆக அரசன் மாறியதைக் கண்டு

மகிழ்ந்தார் மந்திரி குலச்சிறையார்

பாண்டியனோ


"மண்ணெலா நிகழ மன்னனாய் மன்னு
மணிமுடிச் சோழன்றன் மகளாம்
பண்ணினேர் மொழியாள் பாண்டிமாதேவி"

எனத் தமிழ் விரகரால் போற்றப்பட்ட மங்கையர்க்கரசியாரை மனைவியாகப் பெற்று அந்த அருளமுதத்தை மாந்தியதால் அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவராக வரும் பாக்கியமும் பெற்றான்.

**சாலினி**

# வாழ்க கலசம் நிறைந்தே

## ரதபந்தம்(சித்திரக்கவி)



மாதே எந்நேரமுறை செய்த தவநினைவால்எப்
போதும் வண்ணத்தமிழ் சைவசமயப் - போது
ஓங்கவுலகில் கோபுரமெங்கணுமே உயர்க இசைசூழ்க
வாழ்க கலசம் நிறைந்தே

**ரதபந்தச் செய்யுள் வாசிக்கும்முறை:**

தேரின் இடது சக்கரத்தில் தொடங்கி மேலேறி வலது சக்கரத்தில் இறங்கி அடித்தட்டின் வலது நுனியில் ஏறி அத்தட்டின் இடப்புறமாகச் சென்று அதற்கு மேற்றட்டின் இடது நுனியில் நின்று வலப்புறம் சென்று...... இவ்வாறு மாறிமாறி ஒவ்வொரு தட்டாக ஏறி உச்சிக்குச் சென்று அங்கிருந்து நடுவழியாக நேரே கீழிறங்கி வரவும்.

**ரதபந்தச் செய்யுளின் சிறப்பு:**

நான்காவது அடியிலுள்ள எழுத்துக்கள் முதல் மூன்று அடிகளிலும் ஏறுவரிசையில் மறைந்து கிடப்பதே அச் செய்யுளின் சிறப்பு.

**குறிப்பு:**

தமிழர்களாகிய நாம் செய்யும் அசட்டையால் எமது கலைகளும் அவற்றின் அரிய கலைநுணுக்கங்களும் அழிந்து ஒழிந்து வருகின்றன. அவற்றில் ஒன்று சித்திரக்கவி. கலையார்வம்மிக்க தமிழன் தான் வணங்கும் தெய்வம் கொலுவிருக்கும் இடத்தை கோலங்களால் அழகுபடுத்தினான். தன் தெய்வத்தின் பெருமைகளை அக்கோலத்தினுள் எழுதி மகிழ்ந்தான். அவற்றிற்கு சித்திரக் கவிதைகள் என்று பெயரிட்டான். இலக்கணமும் வகுத்தான். இதனை எம் குழந்தைகளாவது அறிந்து கொள்ளவேண்டும் என்ற அவாவில் சித்திரக்கவி ஒன்று புனைந்துள்ளேன். சித்திரக்கவி புனைவதில் பெண்களே சிறந்து விளங்கினார்கள். பெண்களின் அழகுணர்ச்சியும் கோலம்போடும் திறமையும் இதற்கு வழி வகுத்திருக்கலாம். பழந்தமிழ்ப் பெண்டிரின் ஆற்றலை அறிந்து நாமும் பெருமை கொள்வோம்.

சாலினி

# பக்திப் பாடலுக்கொரு பித்துக்குளி

*-அநுராதா-*

அண்மையில் கடந்துபோன ஆகஸ்டு மாதத்தில் ஒரு நாள். இலண்டனில் வெய்யில் தக தகவென்று தகித்துக்கொண்டிருந்தது. அந்த வெய்யிலிலும் ஈஸ்ட்ஹாம் பகுதியில் அமைந்துள்ள தமிழ் ஹவுஸ் உள்ளே மட்டும், அப்பர் சுவாமிகளுக்கு மூசு வண்டறை பொய்கை ஆனது போல மிகவும் குளிர்ச்சியாக இருந்தது. அன்பர்கள் பலர் வந்து அமர்ந்திருந்தனர். கணீர் என்ற குரலில் பக்தியோடும் இனிமையோடும் தேவார திருவாசக அருட்பாடல்கள் அடுக்கடுக்காக வந்து காதிலே தேனாக நுழைந்த வண்ணம் இருந்தன. இடையிடை பக்தியும் நகைச்சுவையும் ஒருங்கிணைந்து சிறுசிறு துணுக்குகளாய், பாடல்களுக்கு இடையே இடைவெளி நிரப்பிகளாய் வந்துகொண்டிருந்தன. இந்த அநுபவம் ஒன்றும் எனக்குப் புதியதல்ல. ஆனால் மிகவும் அரிதானது என்பதுதான் முக்கியமானது. ஏனெனில் இலண்டனில் இப்படியான அநுபவம், சுகாநுபவம் அடிக்கடி கிடைப்பதில்லை.

அந்தக் குரலுக்குரிய நாயகர் வேறு யாருமல்ல. நமக்கெல்லாம் மிகவும் பரிசயமான அன்பர் திரு பித்துக்குளி முருகதாஸ் அவர்களே! சுத்தமான எளிய ஆடை, கண்ணிலே கண்ணாடி, முகத்திலே புன்முறுவல், கையிலே ஹார்மோனியம். நிகழ்ச்சியை ஆரம்பிக்கும்போதே அன்று ஏற்பாடுகள் செய்த சைவ முன்னேற்றச் சங்க உறுப்பினர்களையும் சிவ தொண்டன் நிலைய உறுப்பினர்களையும் மனதாரப் பாராட்டிவிட்டுப் பாடத் தொடங்கினார்கள். இலண்டன் ஸ்ரீமுருகன் கோயில் இருக்கும் புண்ணிய பூமியிலே சைவத்துக்கு ஒரு சங்கமும் சிவத் தொண்டர்களுக்கு ஒரு சங்கமும் அமைந்திருப்பது மிக நல்லது. இந்த இரண்டு சங்கங்களும் இணைந்து இப்படியொரு நிகழ்ச்சியை நடத்துவது மிக மிக நல்லது. நீயா நானா என்று சண்டை போட்டு மக்கள் பிரிந்து போகும் இந்தக் காலத்தில் இந்த இரு சங்கங்களும் ஒருங்கிணைந்து சமய சம்பந்தமாக நிகழ்ச்சி ஏற்படுத்தியிருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது என்று கூறி, இரு சங்கங்களும் இலண்டன் மக்களுக்குப் பலகாலம் பயன் அளிக்கவேண்டும் என்று வாழ்த்தினார்கள்.

பித்துக்குளி அவர்களின் பாடல் பற்றி விமரிசனம் எழுத எனக்கு அருகதை இல்லை, எழுதவும் முடியாது. அவர் பாடிக்கொண்டிருக்கும் காலம் என் வயதைவிட அதிகமானது. இருபத்தேழு வருடங்களுக்கு முன் புதுவருடத் தினத்தன்று திருசிராப்பள்ளி குன்றுடையான் திருக்கோயில் வாசலில் அன்பர் அவர்களின் பாட்டை முதன்முதலாக நேரிலே கேட்கும் பாக்கியம் பெற்றேன். அதற்கு முன் அவர் பாடல்களை இசைத்தட்டில் மட்டுமே கேட்டிருக்கிறேன். மிக இனிமையாகப் பாடும் திறன் - முருகன் அருளாக இருக்கவேண்டும் - பெற்றிருந்தார். பாடும் பணியே பணியாய் அவருக்கு இறைவன் அருளியுள்ள போது கேட்பானேன்? இப்பொழுது வயது சற்று முதிர்ந்து குரல் தடித்திருந்தாலும் இனிமை குன்றவில்லை. பாடப் பாட கேட்கவேண்டும் என்றே தோன்றிக்கொண்டிருந்தது.

இலண்டனில் நடக்கவிருந்த தமது நிகழ்ச்சிகள் பற்றியும், இங்கு பிறந்து வளரும் தமிழ்க் குழந்தைகளுக்கு தமிழையும் சைவத்தையும் ஊட்ட வேண்டிய அத்தியாவசியம் பற்றியும். இலங்கை அன்பர்களோடு ஏற்பட்ட அநுபவங்கள் பற்றியும், அவர்களின் பண்பு பற்றியும் அவ்வப்போது தெரிவித்துப் பாடினார்கள். விநாயகர், முருகன், சிவன், உமை என்று ஒவ்வொரு தெய்வத்துக்கும் பாடி, அன்று கண்ணன் தினமாகையால் கண்ணன் பாட்டுகளும் பாடி சுமார் ஒன்றரை மணி நேரம் உலகபந்தங்களின் நினைவு அற, இறை உணர்வு மனதில் தோன்றும்வண்ணம் எமையெல்லாம் இன்னொரு உலகத்துக்கு அழைத்துச் சென்றுவிட்டார்கள். பாடுவது உடலுக்கும் உள்ளத்துக்கும் நல்லது. இறை நாமங்களைப் பாடுவது உணர்வுக்கு நல்லது. வீட்டிலே குழந்தைகள் மீது கோபம் கொள்ளும்போது திட்டுவதைவிட இறை நாமத்தைச் சொல்வது நல்லது. முருகா! கிருஷ்ணா! என்றெல்லாம் சொல்வதால் மனதிலே சாந்தி ஏற்படும் என்றெல்லாம் பல நற்சிந்தனைகளோடு நிகழ்ச்சியை நடாத்தினார்கள். திரு முருகதாஸ் அவர்களின் இன்னொரு சிறப்பு என்னவென்றால், பாடும்போது அனைவரையும் இணைந்து பாடச் செய்வதுதான். இவரது நிகழ்ச்சி நல்ல ஒரு சங்கீதக் கச்சேரிபோலத் தரமானதாக இருக்கும். சேர்ந்து பாடுமளவு இலகுவாகவும் இருக்கும். தாளவாத்தியத்தை இவரின் துணையே இசைப்பதும் ஒரு தனித்துவம். இவர்கள் இருவரும் இன்னும் பல்லாண்டு காலம் வாழ்ந்து மக்கள் பலர் மத்தியில் இறையுணர்வை ஏற்படுத்தித் தொண்டு புரிய அருளவேண்டும் என்று இறையை இறைஞ்சுவோம்.




அன்புள்ள பெற்றார்களே! இப் பகுதியை உங்கள் பிள்ளைகளின் தமிழ் அறிவை சமய அறிவுடன் வளர்ப்பதன் பொருட்டே உருவாக்கி உள்ளோம். ஆகவே இப் பக்கங்கள் நிறைவோடு அமைய உங்கள் ஒத்துழைப்பு மிகமிக அவசியம். கடந்த பதினொரு இதழ்களில் வெளிவந்த இப்பகுதிக் கட்டுரைகள் எமக்கு ஏமாற்றத்தையே அளித்துள்ளன. இதற்கு நாங்கள் சரியான முறையில் விதிமுறைகளை அறிவிக்காது விட்டமையும் காரணமாக இருக்கலாம் என்று ஐயுறுகின்றோம்.ஆதலால் இம்முறை விதிமுறைகளை இதன்கீழ் தெரிவிக்கின்றோம். தயவு செய்து இவற்றை நன்கு வாசித்து உங்கள் பிள்ளைகளைத் தயார் செய்யுமாறு அன்போடு வேண்டுகின்றோம்.

– ஆசிரியர் –



செல்வி சங்கீதா கஜேந்திரா
வயது 11
வெம்பிளி


## பிள்ளைகளின் கட்டுரைகளுக்கான விதிமுறைகள்

1. பிள்ளைகளின் சொந்தச் சிந்தனையாக இருக்கவேண்டும்.
2. ஒரு முழுத்தாளின் அரைப்பக்கத்தை அடக்கி இருக்கவேண்டும்.
3. சமய விடயங்களை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. பிள்ளைகள் சிந்தித்து எழுதியவற்றை பெரியவர்கள் அழகாக எழுதி அனுப்பலாம் ஆனால் பெரியவர்கள் எழுதியவற்றை சிறுவர்கள் பார்த்து எழுதி அனுப்பக்கூடாது.
5. ஓவியங்கள் கறுத்தமையினால் கீறப்பட்டிருக்கவேண்டும்.

# THIRUGNNA SAMBANDAR



SAMBANDAR'S FATHER STARTED FOR BATHING IN THE TANK. SAMBANDAR WAS ADAMANT IN GOING WITH HIS FATHER AND WEPT. tHE FATHER TOOK HIM AND LEFT HIM ON THE BANK OF THE TANK INSIDE SIRKALI TEMPLE. HE GOT DOWN INTO THE TANK FOR BATHING, THE CHILD CRIED " AMMA! APPA!" THIS REACHED THE EARS OF HIS MOST GRACIOUS LORD. HE HASTENED TO THE TANK ALONG WITH THE GODDESS UMA AND ASKED HER TO FEED THE CHILD WITH MILK. SHE DID SO WITH THE MILK OF SIVAGNANAM IN A GOLD CUP.




THE FATHER GOT UP TO THE BANK AFTER BATH. HE SCOLDED THE CHILD FOR TAKING MILK FROM SOME BODY AND TOOK A STICK TO BEAT IT. THE CHILD POINTED OUT THE GOD ON THE TEMOPLE VIMANA AND BEGAN THE SONG ***' THODU UDAIYA SEVIYAN'***

**TO BE CONTINUED**

THANKS TO GANNAVILAKU

# SAIVAISM

## A WAY OF LIFE



Saivaism means worship of Siva. The meaning of the word Siva is love. Saint Thirumoolar says "Love is Siva" Siva is an embodiment of love.
Saivaism stresses the practice of love and compassion.

Saivaism and life are not different. Saivaism is a way of life and it has to be lived. By worshipping a loving and benevolent god, we begin to love fellow human beings and lead a life filled with happiness.

How are we to develop this life and what are the ways to lead a loving and caring life? Saiva saints and scholars have answered these questions for us.

God is omnipresent. He is present in every living organism including you and me. We hear his voice within us. Our conscience is the voice of god. Our conscience tells us what is right and wrong and what to do and what not to do. We have souls and God is the supreme soul. Saints saw God in every living organism. They were concerned with the welfare of all humans and worked far their salvation.

Saiva poet Saint Paddinathar gives us valuable guidance that helps us lead a path of love in life. He exhorts us "There is God and there is only one God". Many people think that our religion refers to many Gods. We go to a Sivan temple to worship Siva, a Durga Temple to worship Sakthi, a Ganesha Temple to worship Pillaiyar and a Murugan Temple to worship Muruga and so on. Does it not mean that there are many Gods in our religion? No, these names are all given by humans. Though called by different names God is only one - the Easwara or Siva.

"All the wealth and possessions are not there to remain" says Paddinathar. We have only to look around to see the millions of refugees all over the world loosing all their wealth and sometimes their loved ones, fleeing for their lives from war. Is this situation not because of the fact that man has no love and consideration for fellow men? Is it not true that man is the only animal that kills its own kind? Our religion says wealth has to be created but shared. It is not to be hoarded.

"Look at the face of the hungry" says Paddinathar. The greatest offering one can make is the offering of food, they say. Hunger is the strongest physical need of a person. It may lead him even to acts of crime. It was the poet Bharathi who said, "If there is no food to feed a person, we shall destroy

this world". Saint Thiruvalluvar says that the best place to keep your wealth for the future is the feeding of the poor and the hungry. It has been the longest tradition amongst our people to feed those who turn up at their homes and ask for food. Mahathma Gandhi refers to the poor as the children of God. Making them happy will please the God who will bless us.

"Consider dharma and friendship to be good" says Paddinathar. Dharma constitutes all righteous actions by a person, personally, socially and universally. To be righteous in our actions and without sin, Saint Thiruvalluvar advises us to be rid of Jealousy, Desire for others possessions, Anger and use of harsh words to others. These are the ones that cause conflict and crime and bring destruction to man.

**K.Gunaratnam**

If we get rid of them we become loving and loveable and have a successful and fulfilling life. Friendship is and asset. Saint Valluvar tells us how friendship should be. He says friendship is not just for making fun but to criticise and advise a friend when he indulges in a wrong act. Further he says one must help a friend when he is in great difficulties and desperately needing help. A friend in need is a friend indeed.

"Be balanced in your actions" exhorts Paddinathar. One must be honest, impartial and unbending in ones thoughts, words and deeds. That is the way we build up a strong personality. We will earn the respect of all. We must have the courage of our conviction to say what is right and what is wrong without fear or favour. That is the way to develop a strong personality and we will earn the respect of all.

If we take to heart the advice of our Saiva Saint Paddinathar, we will be leading a religious life and our life will be filled with bliss.

---

O Supreme Splendour that rises
within me welling forth as ambrosia,
Having blocked the ways of the
five tritor senses that ever dilutely
Graciously show Thy self to
me as Thou art
Clearest of the clear, Load Siva,
Dweller in the grate holly shrine,
O, Bliss transcending all states without
end, O my Love!

### கோயிற்றிருப்பதிகம்

மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழிஅடைத் தமுதே
ஊறிநின் றென்னுள் எழுபரஞ் சோதி
உள்ளவா காணவந் தருளாய்
தேறலின் றெழிவே சிவபெரு மானே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்க ழியாவையும் கடந்த
வின்பமே என்னுடை யன்பே

# Sundaramurthy Nayanar

**-SWAMI SIVANANTHA-**

Sundaramurthy Nayanar flourished in the 8th Century. He was a great devotee of Lord Siva. He is one of the Tamil Samaya Achariars (four Tamil religious Teachers).



Sundaramurthy Nayanar sang the glories of Lord Siva at all the sacred places that he visited. These hymns are called Thevaram. They have been collected into a book form. All devotees sing the Thevaram even today. The hymns sung by Sundarar, Appar or Thirunavukarasu and Thirugnanas-ampanthar are called Thevaram. The hymns of Manickavachakar are called Thiruvachakam.

Sundarar had the Sakhya Bhava or the attitude of a friend towards the Lord. He freely demanded of the Lord whatever he wanted. He did not do so with selfish desire, however. Whatever he asked was for the sake of those who were dependent on him. He lived only eighteen years.

Sundaramurthy Nayanar was born in Thirunavalur where the entire atmosphere was full of spiritual vibrations and Saivism was well established. In this place there lived a pious, devout and respected Bhramin by name Sadaiyanar whose ancestors were all ardent devotees of Lord Siva. Isaignaniyar was his dutiful wife. She gave birth to a Divine child whom the parents named ' Nambi Arurar' after his grandfather.

In his previous incarnation Arurar was Alalasundarar, who was an ardent devotee of Lord Siva. When the milky Ocean was being churned by Devas and Asuras, a deadly poison began to spread on the surface of the ocean threatening the existence of all beings. Then Alala Sundarar collected that poison in his hand and gave it to Lord Siva who drank it for the protection of the world. Hence Sundarar got the word Alala (poison) prefixed to his name.

Once when Alala Sundarar was living by the side of Lord Siva in the mount Kailas, serving the Lord and bringing the flowers from the garden for his worship, he cast a lustful look at Aninditi and Kamalini, the attendants of Goddess Parvathi who had also gone to the garden to collect flowers for the Divine Mother's worship. They, too, fell in love with him. Lord Siva, through His divine vision, understood all that happened in the garden. He called Alala Sundarar and said, " Sundarar, since you fell in love with these girls, you and they, too, will go don to the earth and take a human birth. You will marry them and enjoy the pleasures of the world". Sundarar wept bitterly, regretting his folly which has resulted in his separation from the Lord. He prayed to the Lord: " Oh Lord! It is due to my evil thought that I have to go through this separation from Thee. I am afraid lest I should be steeped in ignorance and forget Thee. Oh Lord of mercy! Let this not happen to me. Oh Lord of compassion! Dispel my ignorance soon and take me back to your lotus feet." Lord Siva granted this wish.

There was another cause for Sundarar's human birth. To an ordinary man it may appear that Sundarar was a victim of lust, even in the divine realm of Kailasa. It was not so. Sundarar was only an instrument in the hands of God. It was Lord Siva's wish that Sundarar should sing *Thiru Thonda Thogai* for the benefit of mankind. So Lord Siva entered his mind and created a desire for these two girls. Also, the Lord wanted to teach mankind a great lesson. Lust is extremely powerful. It can delude even a great

devotee of the Lord like Sundarar, if he is not ever vigilant. Maya's charms are powerful. Unless this evil quality is burnt, the Jiva cannot reach Siva. Yet another lesson. The lustful eye was the cause of Sundarar's downfall. But, when it is used in the service of the Lord ( for looking at the holy shrines, holy images of God, saints and study of scriptures) the very same organ will help towards our emancipation.

Sundarar was, therefore, born as Arurar. The king of that place Narasinga Munaiyar, happened to see the beautiful child. He liked him. He wanted to bring him up himself and asked for the parent's permission. Sadaiyanar, whose mind was full of dispassion and who was not attached to anything in this world, immediately complied with the king's wish. As we shall see later, he and his devout wife are also regarded as Nayanars.

The boy grew up under Royal care. At the proper age, the parents wanted to get their son married. Sadaiyanar sought Sadankavi Sivachariar's consent to obtain his daughter's hand for his son, Arurar. Sivachariar gladly agreed. But the wedding was not to take place.

Just when the ceremony was to begin, an old Bhramin, with sacred ashes on his body, Ruthradsha around his neck and matted locks on his head appeared and said: ' This man, Arurar, is my bond slave. I have a document to that effect executed by his grandfather. He cannot marry." This put and end to that ceremony. Sundarar and the Bhramin left the place. The young bride fixed her mind on the holy feet of Sundarar, shed her mortal coil and attained the immortal abode of Lord Siva.

Sundarar and the Old man had a heated argument. Sundarar asked him: "Who are you and from where have you come ?" To which the Bhramin replied: " I belong to Tiruvennai Nellur." Sundarar called him a liar and said: " Come, let us go to Tiruvennai Nellur and get this dispute settled by the wise men there."

At Tiruvennai Nellur, before an assembly of wise men the old Bhramin produced the document which read as follows:

*I, Aruran, the Adi Saivite of Thirunavalur, execute this bond of slavery with heart and soul. I and my progeny for all time to come are bond-slaves to Pithan of Tiruvennai Nellur, and we are bound to serve him by all means.*

Pithan means Lord Siva who delights to be called a 'mad man', to exemplify the state of the highest Yogi whose behaviour resembles that of a mad man but who teaches us that there is nothing in this world worth taking any notice of and the worldly wise men are all mad people in truth.

After examining the witnesses cited in the document and verifying the grandfather's signature, the assembly confirmed the old man's claim. Sundarar had to accept it as God's will. Followed by all of them the Bhramin entered the temple of Tiru Arul Turai on the pretext of showing them his house, and promptly vanished. Arurar understood that it was the Lord Himself who has appeared as the old man to save him from the shackles of Samsara. He was afflicted very much at heart that he has not recognised him earlier. He cried aloud. The Lord appeared before him and blessed him: "Oh noble soul. You are already my Bhakta. You were in my abode in Kailasa before this birth as a man. A wrong thought made you take this birth. Now I have myself come to save you."

Because Sundarar had quarrelled with him, the Lord Himself called him *Vanthondan* ( the devotee who used harsh words) and asked him to sing His glories. " My dear child, you called me *Pithan* ( mad man) during your quarrel. So begin with this word and compose a poem." Sundarar did so: the result was that inspiring poem *Pitha Pirai Soodi*. The Lord himself came to be known as *TADUTHATKONDA ISWAR*.


## நமசிவாய

NAMASIVAYA


Through the letters Five can God's holy feet be seen. Through the letters Five, the whole world you can rule. Through the letters Five, mind's action can be stilled. The letters Five have come and entered my heart.


# SRI RAMAKRISHNAR

KAMARPUKUR IS A SMALL VILLAGE SITUATED SEVENTY MILES FROM CALCUTTA. IT IS SURROUNDED BY LUSH PADY FIELDS AND RETAIN THE IDYLLIC SYMPLICITY OF AN INDIAN VILLAGE.




THERE LIVED A DEVOUT BRAHMIN COUPLE BY NAME KSHUDIRAM AND CHANDRAMANI. THEY WERE POOR BUT HONEST AND VERY DEVOTED TO GOD. THEY SPENT MOST OF THEIR TIME IN WORSHIPPING THE GOD. THE WHOLE VILLAGE RESPECTED THEM.






GAYA IS A HOLY CITY IN BIHAR. FROM TIME IMMEMORIAL MEN AND WOMEN FROM THE FOUR CORNERS OF INDIA WOULD VISIT GAYA. AT THE AGE OF SIXTY KSHUDIRAM TOO WENT ON A PILGRIMAGE TO GAYA TO WORSHIP LORD VISHNU.




ONE NIGHT AT GAYA, HE HAD A THRILLING DREAM. THE LORD VISHNU WHO RESIDES IN GAYA TEMPLE AS GADADHAR APPEARED BEFORE HIM.




AT THE SAME TIME CHANDRAMANI TOO HAD A VISION. WHILE SHE WAS WORSHIPPING LORD SHIVA, A LIGHT EMANATED FROM THE SHIVA LINGA. THAT JYOTI SLOWLY CAME TOWARDS HER AND ENTERED HER BODY.



# சைவ முன்னேற்றச் சங்கத்தின் 18வது ஆண்டுநிறைவு விழா

23-09-95 அன்று சைவ முன்னேற்றச் சங்கத்தின் ஆண்டுவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. நியூகாம் நகர மேயரின் ஆசியுடன் சங்கத்தின் தலைவர் திரு கு. சிதம்பரப்பிள்ளை அவர்கள் தலைமையில் நாடகம், நடனம் ஆகிய நிகழ்ச்சிகளுடன் சிறப்பாக நடந்தேறியது.

இவ்விழாவில் செல்வி அனுஷா வரதலிங்கத்தின் மாணவிகள் சிறப்பான முறையில் நடனமாடி சபையோரை மகிழ்வித்தனர். இவர்களுடன் ஆசிரியை அனுஷாவும் சிவநடனம் ஆடி சபையோரை மகிழ்வித்தார்.

சைவ முன்னேற்றச் சங்கத்தின் மாணவ மாணவிகள் தமிழ் படும் பாடு என்னும் நாடகத்தை மிகச் சிறப்பாக நடித்தனர். இந் நாட்டில் பிறந்து வளர்ந்த இம் மாணவ மாணவிகள் யாழ்ப்பாணப் பிராந்தியத் தமிழ்மொழி வழக்கினை மிக லாகவமாகப் பேசியமை சபையோரின் நன்மதிப்பைப் பெற்றது.

சைவ முன்னேற்றச் சங்கத்தின் நியூ மோல்டன் பிரதேசத் தேவார வகுப்பு மாணவர்கள் மிக அழகாக திருமுறை பாடிச் சபையோரைப் பக்திவசப்படுத்தினர்.

மொத்தத்தில் எல்லாமே சிறப்பாக அமைந்து சபையோரைத் திருப்தியடுத்தின

**VARSHI'S FOOD STORE**

நியூமோல்டனில் ஒரு தமிழ்க் களஞ்சியம்



இலங்கையிலிருந்தும் இந்தியாவிலிருந்தும்
இறக்குமதி செய்யப்பட்ட
அனைத்து உணவுப் பண்டங்களுடன்
மரக்கறிவகைகள்
பத்திரிகைகள், சஞ்சிகைகள் ஓடியோ,வீடியோ,சீடி
ஆகியவற்றுக்கு நீங்கள் நாடவேண்டிய
தரமான நம்பிக்கையான ஸ்தாபனம்

**VARSHI'S FOOD STORE**
**103 BURLINGTON ROAD**
**NEW MALDEN, SURREY KT3 4LR**
**(NEAR BURLINGTON JUNIOR SCHOOL)**

**TEL : 0181 336 0061**

## 'கலசம்' சந்தாப் படிவம்

அன்புடையீர்,

கலசம் சஞ்சிகையை தொடர்ந்து இரண்டு வருடங்களுக்குப் பெற்றுக் கொள்ள விரும்புகின்றேன்.
இத்துடன் அதற்கான £ பெறுமதியான காசோலையை அனுப்பி வைக்கின்றேன்.

பெயர் : ______________________

முகவரி : ______________________
______________________
______________________

தொலைபேசி இல: ______________________

(காசோலைகள் SMS (UK) என்ற பெயருக்கு எழுதப்படுதல் வேண்டும்.)

| | |
|---|---|
| தனிப்பிரதி | : £1.00 |
| 2 வருடம் (பிரித்தானியா) | : £10.00 |
| 2 வருடம் (ஐரோப்பா) | : £ 14.00 |

SELECT
PROPERTY SERVICES

# QUALITY PROPERTIES
# QUALITY SERVICE

*SALES, LETTINGS, PROPERTY MANAGEMENT, AND MAINTENANCE*

# LANDLORDS

WE REQUIRE YOUR
VACANT PROPERTIES !!!

# TENANTS

WE HAVE A WIDE SELECTION OF
PROPERTIES FOR YOU TO VIEW

We Can Offer

- Professional Property Management Services
- Timely Payment Of Top Rents
- All Viewings Accompanied
- Regular Inspections
- No Hidden Fees

Guaranteed Rent Schemes

**WHY TRY THE REST !**
**SELECT THE BEST**

**TEL : 0181 - 470 1500**

**243A HIGH STREET NORTH, LONDON E12 6SH.**

**SAB BUSINESS SYSTEMS LIMITED**

CANON COPIERS

CANON FAX

CANON PRINTERS

COMPUTERS

# SALES & SERVICE

## NEW & REFURBISHED

**SAB BUSINESS SYSTEMS LTD**

28 AMBERLEY GARDENS EPSOM SURREY KT19 0NH

TELEPHONE : 0181 - 786 8083 FACSIMILE : 0181- 224 5283

E- MAIL : MANO@MAIL.PRO-NET.CO.UK

MOBILE : 0860 904467

# RAJU PATTNI & SON
# ராஜு பட்னி அன் சன்

## Experts in equisite modern & Tamil's traditional jewellery

**OPEN 7 DAYS**



நியாய விலைக்கு லண்டனில்
நீங்கள் நாடவேண்டிய
ஒரே தங்க மாளிகை
உங்களுக்குத் தேவையான
**தாலி, பென்ரன், அட்டியல்**
**பதக்கம், மோதிரம், காப்பு**
**தோடு, நெக்லஷ், சங்கிலி**
ஆகியவற்றுக்கு நீங்கள் விரைந்து
செல்லவேண்டிய ஒரே இடம்

RAJU PATTNI & SON
PATTNI HOUSE
58 - 60 EALING ROAD,
WEMBLEY, MIDDX
HA0 4TQ
TEL : 0181 903 6677/2859
0181 902 0577
FAX : 0181 903 4887

பொன்னுருக்கலுக்கு வேண்டிய
வசதிகள் நிறைந்தது
எமது ஸ்தாபனம்






உங்களுக்குத் தேவையான
தமிழ், ஆங்கிலசஞ்சிகைகள்
தமிழ், ஹிந்தி, ஆங்கில,வீடியோ, ஓடியோக்கள்
மற்றும் இலங்கையிலிருந்து தருவிக்கப்பட்ட
உணவுப் பண்டங்கள்
உடன் மரக்கறிவகைகள்
ஆகியவற்றை மலிவு விலையில்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
கொள்வனவு செய்வதற்கு
நம்பிக்கையோடு அணுகவேண்டிய
ஒரே ஸ்தாபனம்

**249-251 Fore Street, Edmonton, London N18**
**Tel : 0181 884 4979 Fax : 0181 345 6317**
25 புது கடை, பலாலி வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம், இலங்கை

# GLEN CARRIERS LIMITED

14 Allied Way, off Warple Way, Acton, London W3 0RQ
Tel: 01-740 8379, 01-749 0595
Fax No. 01-740 4229 -- Telex No. 929657 Glenca G

## SHIPPING - AIR FREIGHT - TRAVEL

UNACCOMPANIED BAGGAGE - PERSONAL EFFECTS, HOUSEHOLD GOODS, VEHICLES, MACHINERY ETC.

TO COLOMBO AND OTHER WORLD WIDE DESTINATIONS
MAIN AGENT FOR AIRLANKA

## AIR LANKA

LONDON - COLOMBO - LONDON

| | | | |
|---|---|---|---|
| 01 OCTOBER | - | 10 DECEMBER | £495 |
| 11 DECEMBER | - | 20 DECEMBER | £560 |
| 21 DECEMBER | - | 23 DECEMBER | £650 |
| 24 DECEMBER | - | 30 APRIL | £420 |

LONDON - MADRAS - TRIVENDRUM - TRICHY - LONDON

01 OCTOBER - 30 NOVEMBER

| | |
|---|---|
| NO STOP OVER IN COLOMBO | £420 |
| WITH STOP OVER IN COLOMBO | £480 |

## BRITISH AIRWAYS

LONDON (GATWICK) - COLOMBO - LONDON(GATWICK)

| | | | |
|---|---|---|---|
| 01 OCTOBER | - | 10 DECEMBER | £450 |
| 11 DECEMBER | - | 19 DECEMBER | £610 |
| 20 DECEMBER | - | 24 DECEMBER | £665 |

(ALL ABOVE FARE'S ARE INCLUSIVE OF AIRPORT TAX)

ALL YOUR GOODS GO TO OUR BONDED WAREHOUSE IN COLOMBO

உங்கள் விமானப் பயண ஒழுங்குகளுக்கும் உங்களின் பொருட்களை
ஸ்ரீ லங்காவிற்கு அனுப்புவதற்கும் குறைந்த கட்டணத்தில் நிறைந்த
சேவையினைப் பெறுவதற்கும் நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்

BONDED WAREHOUSE

LAKSIRISEVA, 253/3 Avissawella Rd, Colombo 14, Tel: 575576

# LANDLORDS

UNIQUE RENT GUARANTEED SCHEME AVAILABLE
FULLY COMPUTERISED MANAGEMENT SYSTEM
QUALITY TENANTS ALWAYS WAITING

ESTATE & LETTING AGENTS

Yoge Empire Estates

ஜோகி எம்பய எஸ்ரேற்ஸ்

## TENANTS

PROFESSIONALS -
STUDENTS -
DSS WELCOME
LOW DEPOSIT IF
REFERENCE IS GOOD

*OUR STAFF ARE DEDICATED TO PROVIDING A FIRST CLASS SERVICE TO YOU AT ALL TIMES*

NO EXTRA OR HIDDEN FEES

## CALL US NOW ON

**0181 475 0015 (4 Lines)**
**297 High Street**
**Manor Park**
**London E12**



சைவ முன்னேற்றச் சங்க பதிப்பகத்தில் அச்சமைப்பும் வடிவமைப்பும் செய்யப்பட்டு, ஐரோப்பாவில் தரமான செல்வம் அச்சகத்தினரால் அச்சிடப்பட்டு சைவ முன்னேற்ற சங்கத்தால் 24.10.1995 அன்று வெளியிடப்பட்டது.